மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய அறிமுகம்! நாளைய நாகரிகம்!!
மகாராசி சில்க்ஸ்
சல்வார் கிற
இந்தியன் சாறி வகைகள்
மற்றும் சிறுவர், சிறுமியருக்கான றெடிமேட் ஆடைகள்
அனைத்திற்கும் நாடவேண்டிய இடம்
மகாராசி சில்க்ஸ்
59, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 28 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஜ் 19 (11.02.2004) புதன்கிழமை இதழ் :132

## இம்முறை வாக்களிக்க 5 லட்சம் புதிய வாக்காளர்!

(கொழும்பு)

கடந்த 2001 ஆம் ஆண்டு டிசம்பரில் நடந்த பொதுத்தேர்தலின்போது 12,428,208 ஆக இருந்த வாக்களிக்கத் தகுதியுடைய வாக்காளர் எண்ணிக்கை - இந்த வருடம் ஏப்ரல் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் 12,899,032 ஆக அதிகரித்துள்ளதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

தேர்தல் திணைக்களம் வெளியிட்ட தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இந்த வருடம் நடைபெறவுள்ள தேர்தலில் புதிதாக நான்கு இலட்சத்து எழுபதாயிரத்து எண்ணூற்று இருபத்து நான்கு வாக்காளர்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அனைத்து மாவட்டங்களிலும் சிஹல உறுமய போட்டியாம்!

(கொழும்பு)

அனைத்து தேர்தல் மாவட்டங்களிலும் சிஹல உறுமய வேட்பாளர்களை நிறுத்தவுள்ளதாக அந்தக் கட்சியின் பிரசார செயலாளர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தேர்தலில் போட்டியடவிருக்கும் வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும் பணிகளை சிஹல உறுமய ஆரம்பித்திருக்கிறது.

அத்துடன், இந்தத் தேர்தலில் சிஹல உறுமய சிங்கள வாக்களர்களை மட்டும் குறிவைத்து பிரச்சாரங்களை நடத்தாமல் அனைத்து இனமக்களையும் கவரும் வகையில் பிரசாரங்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு பாடம் புகட்டுவேன் என்கிறார் ரணில்!

(கொழும்பு)

பொருளாதாரத்துக்கும் நாட்டுக்கும் பெரும் சுமையை ஏற்படுத்தும் தேர்தல் ஒன்று நடைபெறாமல் இருப்பதற்கு, தான் ஜனாதிபதியுடன் இணக்கப்பாட்டுக்கு வர முயன்றபோதிலும், ஜனாதிபதி அதைப்பற்றிக் கவலைப்படாமல் தேர்தலை அறிவித்திருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சிறிகோத்தாவில் நேற்றுக் காலை நடைபெற்ற, ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுக்கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றும் போது -

ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள். காபந்து அரசாங்கம் ஒன்றை உருவாக்கிய ஜனாதிபதி, அவரது கட்சியைச் சேர்ந்த இருவரை அமைச்சர்களாக நியமித்துள்ளார்.

இது ஜனநாயகத்துக்கு விரோதமானது.

யுத்தம் இல்லாமல் யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஊடாக சமாதானத்தை ஏற்படுத்த முடிந்தி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கைதாகி காணாமற்போனோர் பிரச்சினைக்கு படையதிகாரிகளே பொறுப்பேற்க வேண்டும்!

### இராணுவத் தளபதி லயனல் பலகல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் நிலவரத்தில் மாற்றம் ஏற்பட்டபோதிலும் போர்நிறுத்தம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. விடுதலைப் புலிகளும் கடைப்பிடிப்பர் என இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்தார்.

ஹெக்டர் கொப்பேகடுவ இராணுவ பயிற்சிக் கல்லூரியில் படையினருக்கான சர்வதேச மனிதாபிமானச் சட்டம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பயிற்சி வகுப்பினை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையிலேயே இராணுவத் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் தொடர்பாக படையதிகாரிகள் மற்றும் சிப்பாய்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகளை நான் வரவேற்கிறேன். இந்தப் பயிற்சிகளால் மனிதஉரிமை தொடர்பான வன்செயல்கள் குறைவடைந்துள்ளன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி சபை தேர்தல்; அம்பாறையில் இம்மாதம் 21 இல்!

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் ஏழு உள்ளூராட்சி மன்றங்களுக்கான பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் தேர்தல் இந்த மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை நேற்று முதல் தபால் அலுவலகங்களுக்கு விநியோகிக்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாக தேர்தல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது.

சம்மாந்துறை, அக்கரைப்பற்று, நிந்தவூர், அட்டாளைச்சேனை, .பொத்துவில், திருக்கோவில் ஆகிய பிரதேசசபைகளுக்கும்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க உயரதிகாரி இவ்வாரம் வருகிறார்!

(கொழும்பு)

அமெரிக்காவின் சர்வதேச தொழிலாளர் விவகார பிரதிச் செயலாளர் இந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவிருப்பதாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது

பரநதுபட்ட சர்வதேச கொள்கை, திட்டமிடல் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயும் நோக்கிலேயே அமெரிக்க சர்வதேச தொழிலாளர் விவகார பிரதிச் செயலாளர் ஆர்னோல்ட் எல்.லெவின் இலங்கை வருகிறார்.

இவர் இங்கு தங்கியிருக்கும் போது, தொழி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அதிகாரமுள்ள எந்த அரசுடனும் நாங்கள் பேச்சு நடத்தத் தயார்!

## கேணல் கருணா தெரிவிப்பு





# கேணல் கருணா தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

**அதிகாரங்களுடன் கூடிய எந்த அரசாங்கம் வந்தாலும் நாம் பேசுவதற்கும், சமாதான வழிமூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கும் நாம் தயாராகவே உள்ளோமென புலிகளின் கிழக்கு மாகாண சிறப்புத் தளபதி கேணல் கருணா தெரிவித்தார்.**

கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் புருவ் ஹொவ்டேயை - மட்டக்களப்பு - கரடியனாறு தேனகம் விடுதியில் நேற்றுமாலை சந்தித்தபின் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டிலேயே கேணல் கருணா இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

போர்நிறுத்த உடன்படிக்கையை நாம் உறுதியுடன் கடைப்பிடித்து வருகின்றோம். நடைபெறவுள்ள தேர்தலில் பேரினவாதிகளை நிராகரித்து, சமாதான முயற்சியை முன்கொண்டு செல்பவர்களை சிங்கள மக்கள் தெரிவுசெய்யவேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் பொதுத் தேர்தலில் நாம் எந்தவிதத்திலும் தலையிட மாட்டோம். தேர்தல் நீதியானதாகவும், சுதந்திரமானதாகவும் இங்கே நடக்கும். மாறிவரும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினர் தாக்குதல்; இரு இளைஞர்கள் காயம்!

கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த இரண்டு இளைஞர்களை இராணுவத்தினர் மறித்து தாக்கியதில் இருவரும் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் ஏ-9 வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்களை இராணுவத்தினர் நிறுத்துமாறு சைகை காட்டியபோது அதை மதிக்காமல் அவர்கள் சென்றதாலேயே, அவர்கள் தாக்கப்பட்டதாக பொலிஸாரை மேற்கோள்காட்டும் செய்திகள் தெரிவித்தன.

மானிப்பாயைச் சேர்ந்த என்.பார்த்தீபன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்கு குடாநாட்டு மக்கள் தயாராக வேண்டும்!

## காவற்துறை பொறுப்பாளர் நடேசன்

(கிளிநொச்சி)

விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான சக்தியால் திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டு வரும் குற்றச்செயல்களை குடாநாட்டு மக்கள் இனங்கண்டு கட்டுப்படுத்துவதற்கு உதவுமாறு தமிழீழ காவல்துறை கோரியுள்ளது.

இதுகுறித்து கலந்துரையாடிய தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் ப.நடேசன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இன்றைய சூழ்நிலையில் பேச்சுவார்த்தை, யுத்தநிறுத்தம், வெளிநாட்டு இராஜதந்திரிகள் வருகை போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றுவந்தாலும் தமிழர் தாயகப் பிரதேசத்தில் மக்களின் வாழ்க்கை நிலை இன்னமும் இயல்புக்குத் திரும்பாததை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

காலங்காலமாக உற்றார் உறவினருடன் தமது சொந்த வாழ்விடங்களில் வாழ்ந்துவந்த மக்கள், இன்னும் தமது சொந்த இருப்பிடங்களுக்கு சென்றுவாழ முடியாதநிலை தொடர்கிறது.

அரசபடைகளால் குண்டுவீசி அழிக்கப்பட்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## எந்தவொரு அரசாங்கத்துடனும் அமெரிக்கா நெருங்கி செயற்படும்

(கொழும்பு)

இலங்கை மக்கள் தேர்தல் மூலம் தெரிவு செய்யும் எந்தவொரு அரசாங்கத்துடனும், அமெரிக்கா நெருக்கமான உறவுகளை வைத்திருக்கும் என்று, கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் கொடி ரெய்லர் தெரிவித்தார்.

தற்போதைய அரசியல் சூழல் தொடர்பாக அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் -

தேர்தல்கள், வன்முறைகளின்றி சுதந்திரமான முறையில் நடைபெற வேண்டும். இந்த தேர்தல் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு நல்லதொரு வாய்ப்பினை அரசியற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
nail s-jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

## பிரிவுபசார விழா

இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனத்தில் கணக்காளராகவும், யாழ். அலுவலகப் பொறுப்பதிகாரியாகவும் கடமையாற்றி நாளை சேவையிலிருந்து ஓய்வுபெறும் க.மகேஸ்வரனின் சேவையைக் கௌரவிக்கும் பிரிவுபசார விழா, இன்று 2 மணிக்கு கூட்டுத்தாபன யாழ்.அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.


இதோ! மூன்று படம் இலவசம்!!

எமது நிறுவனத்தில் பிரதியாக்கம்செய்யும் சகல வித மான புகைப்படச் சுருள்களுக்கும் மூன்று புகைப்படம் இலவசமாக வழங்கப்படும். உங்கள் புகைப்படச் சுருள் களைப் பெற்றுக்கொள்ள

ஸ்கை எலக்ரோனிக்ஸ்
10, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

லேன் சண்,
119, கண்டி .வீதி,
சாவகச்சேரி

மூர்த்தி ஸ்ருடியோ அன் கலர் லாப்
பிரதான வீதி, மானிப்பாய்.
(சி-2212) T.P:- 021-222-2884


# மிதிவெடி அகற்றும் பணிகள் தாமதமடைவதால் மின்னிணைப்பு வேலைகள் தடைப்பட்டுள்ளன!

## மின்சாரசபை அதிகாரி தகவல்

(யாழ்ப்பாணம்)

மிதிவெடி அகற்றும் பணி நிறை வடையாமல் சில பகுதிகளில் உள்ளதனால், மின் இணைப்பு வேலைகள் தடைப்பட்டுள்ளன என, இலங்கை மின்சார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்று வரும் மின் இணைப்பு வழங்கும் நடவடிக்கை தொடர்பாகக் கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது,

யாழ்.மாவட்டத்தில் மின் இணைப்புக்கள் சேதப்பட்டிருந்த மற்றும் துண்டிக்கப்பட்டிருந்த இடங்களுக்கு புதிய இணைப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி முதலியவற்றின் நிதியுதவியுடன் இந்தப் பணிகள் இடம் பெற்றுவந்தன. எனினும், தற்போது அரசியற் குழப்பநிலை காரணமாக அவற்றின் நிதியுதவி நிறுத்தப்பட்டிருக்கின்றன.

இலங்கை மின்சாரசபையின் நிதியிலிருந்து தென்மராட்சி மற்றும் வடமராட்சி உட்பட சில பிரதேசங்களில் மின் வழங்கும் பணிகள் இடம் பெற்றுவருகின்றன.

புளியங்குளத்திலிருந்து ஓமந்தை வரைக்குமான பகுதியிலும், முகமாலை தொடக்கம் பளை வரையான பகுதிகளிலும் மின் இணைப்புக்களை வழங்குவதற்கான பணிகள் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் இடம்பெற்றுவந்தன.

எனினும், அந்தப் பகுதிகளில் மிதிவெடி மற்றும் கண்ணிவெடி அகற்றும் பணிகள் பூரணமாக இடம்பெறாதிருக்காமையால், அந்தப் பகுதியில் இடம்பெற்றுவந்த மின் இணைப்பு வழங்கும் பணிகள் தற்காலிகமாக கடந்த டிசம்பர் முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு மிதிவெடி அகற்றாமை காரணமாக, பல பகுதிகளில் மின் இணைப்புக்கள் வழங்கும் பணிகள் முடங்கிக் கிடக்கின்றமை அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டன.

இதனையடுத்து, 'டெனிஸ்' மிதிவெடி அகற்றும் பிரிவினர் அப்பகுதிகளில் வெடிபொருட்களை எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் அகற்றிக் கொடுப்பதாக உறுதியளித்துள்ளனர்.

அவர்களது பணிகள் முடிவடைந்தபின்னர் அப்பகுதிகளின் மின்சாரம் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுமெனத் தெரிவித்தார்.

(ப)


அருணலு

பெறுமதிமிக்க பரிசில்களை
5ஆம் ஆண்டு புலமைப்பரிசு பெறும்
செல்வங்களுக்கு வழங்குகிறது.

உங்களுடைய பிள்ளை புலமைப்பரீட்சையில் சித்தியெய்தி அதிகப்படியான புள்ளிகளை 1ம். 2ம் அல்லது 3ம் இடத்தில் அவருடைய பாடசாலையில் பெற்றிருப்பதுடன் பரீட்சை எழுதும் போது அவரது அருணலு கணக்கில் குறைந்தது ரூபா 5,000/- மீதியாக இருந்திருந்தால். உங்களுக்கு எதிர்பாராத ஆச்சரியங்கள் காத்திருக்கின்றன.

நீங்கள் அருணலு கணக்கு வைத்திருக்கும் கொமர்ஷல் வங்கி கிளைக்கு பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் சென்று பெறுமதிமிக்க பணப்பரிசுகளை தட்டிக்கொள்ளுங்கள். நீங்கள் உங்களுடைய பிள்ளைக்கு அருணலு கணக்கு திறந்திருப்பதையிட்டு மகிழ்ச்சியடையவில்லையா?

கொமர்ஷல் வங்கியின் அருணலு - ஒளிமயமான எதிர்காலத்தை புலமைப்பரிசு பெறும் செல்வங்களுக்கு வழங்குகிறது.

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.


## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் ஏற்பாட்டில் - எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் புகழ் பெற்ற வங்காள நெறியாளர் அபர்ணா சென்னின் 'நினைவுகளில் வீடு' என்ற வங்காளமொழித் திரைப்படம் ஆங்கிலத் துணைத்தலைப்புக்களுடன் காண்பிக்கப்படும். இத்துடன், 'லிஜ்ஜத் சகோதரித்துவம்' என்னும் விவரணத் திரைப்படமும் காண்பிக்கப்படும்.

படக்காட்சியின் இறுதியில்- எழுத்தாளர் சு.யேசுராசா க.சட்டநாதன் ஆகியோரின் நெறிப்படுத்தலின்கீழ் கலந்துரையாடல் இடம்பெறும். ஆர்வமுள்ள எவரும் பங்குகொண்டு பயன்பெறலாமென ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்தார்.

## வணிகர் கழகத்தில் நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வணிகர் கழகத்தின் இந்த ஆண்டுக்கான நிர்வாகசபை தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது, தலைவராக ஜெயராசாவும், உபதலைவராக ஜெயசேகரனும், செயலாளராக இ.ஜனக்குமாரும், உபசெயலாளராக க.குலரத்தினமும், பொருளாளராக ச.சிவகுமரன் ஆகியோரும் -

நிர்வாகசபை உறுப்பினர்களாக த.சற்குணராசா, கங்கைவேணியன், த.தியாகலிங்கம், ப.சிவபாஸ்கரன், இ.சிவலிங்கம், கு.தர்மராசா, க.மகாலிங்கம், ம.சிவச்சந்திரபோஸ், சி.ஜெயகாந்தன், த.குணசிங்கம், த.ஸ்ரீவிமலேஸ்வரன், அ.நாகராசா, இ.சிவசுப்பிரமணியம், கா.நித்தியானந்தன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.


நிறைஞ்சனலஸ் சங்கானை
பாலா, சர்மி
நடித்த
காதல் கிசு கிசு
காட்சி நேரம்:11.00, 2.45, 6.00, (பு.நே.)
ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
HULK
(சி-2196)

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு
பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா
நடித்த
ஜெய்
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-2197)

# ஊடகத்துறையை பக்கச்சார்பற்று நடத்துவதே தனது கொள்கையாம்!

## லக்ஷ்மன் கதிர்காமர் கூறுகிறார்



(கொழும்பு)

ஊடகத்துறையை யாருக்கும் பக்கம் சாராமல் நடுநிலையாக நடத்துவதே தனது குறிக்கோளென காபந்து அரசின் புதிய ஊடகத்துறை அமைச்சரான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

நாட்டிற்கு ஆரோக்கியமான விவாதங்களை நடத்துவதற்கு நான் தயாராகவுள்ளேன். இதில் இளைய சமூகம் இணைந்து தேசிய விவகாரம் தொடர்பான தமது கருத்துக்களை முன்வைக்கலாம்.

அத்துடன் - கல்வியாளர்கள், பொதுமக்கள், சமூகப் பிரதிநிதிகள் என அனைவரும் தமது கருத்துக்களை பகிரங்கமான விவாதங்களில் தெரிவிக்கலாம். எமக்குத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் புதிய முகங்கள் தேவை. இதன்மூலம் மக்களை ஒரு புத்துணர்ச்சியான நிலைக்குள் வைத்திருக்கலாம்.

காபந்து அரசில் ஊடகத்துறை அமைச்சராக இரண்டு மாதங்கள் இருந்தாலும் - நடுவுநிலைமை, ஊடகத்துறைப் பண்பாடு என்பனவற்றில் தான் இறுக்கமான நிலையைப் பேணப்போவதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன், தேர்தல் தொடர்பாக எந்தவொரு கட்சிக்கும் இடையூறை வழங்காமல், அவர்களுக்கான விவாதங்களை நடத்தநேரம் ஒதுக்கிக்கொடுக்கப்படும்.

தொலைக்காட்சிகளில் நாட்டிற்கு நல்லதைச் செய்யக்கூடிய விவாதங்களை நடத்துவதற்கு ஜனாதிபதி மிக ஆர்வமாகவுள்ளார்.

சிக்கலான நேரத்தில் தற்போது தேர்தல் ஒன்று வந்துள்ளது. இந்தத் தேர்தலை ஒழுங்கான முறையில் நடத்துவதன்மூலம் - சரியான வழியில் நாம் தேர்தலை நடத்தியுள்ளோம் என்பதனை நாம் உலகிற்குக் காட்டலாம் எனவும் அவர் கூறினார்.



இராணுவத்துக்கு மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டங்கள் குறித்து நடத்தப்பட்ட கருத்தரங்கின் மூன்றாவது பிரிவுக்கான பயிற்சியை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல ஆரம்பித்துவைக்கின்றார்.

# ஊடகத்துறை மற்றும் பொலிஸ் அதிகாரங்களை தேர்தல் ஆணையாளரிடம் கையளிக்க வேண்டும்

## ஜனாதிபதியிடம் கருஜெயசூரிய கோரிக்கை



(கொழும்பு)

**நாட்டின் 17 ஆவது சரத்தின்படி ஜனாதிபதி சந்திரிகா தேர்தல் ஆணையாளரிடம் ஊடகத்துறை, மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்கவேண்டும். இதன்மூலமே தேர்தலை நீதியான தாகவும், சுதந்திரமானதாகவும் நடத்த முடியும்.**

**இவ்வாறு ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித்தலைவரும், அமைச்சருமான கரு ஜெயசூரிய கொழும்பில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.**

**அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -**

தேர்தல் ஆணையாளரிடம் இந்தப் பொறுப்புக்களை ஜனாதிபதி வழங்குவதையே பொதுமக்கள் விரும்புகின்றனர்.

அத்துடன், தேர்தல் சுதந்திரமானதாகவும், நீதியானதுமாக நடத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை நியமிக்க வேண்டுமென கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் கலந்துகொண்ட காணி அமைச்சர் ராஜித சேனாரத்தின தெரிவிக்கையில்,

ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கம் தேர்தலைச் சந்திக்கத் தயாராகவே உள்ளது. ஒரு கட்சி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையாக இருந்து தனது பதவிக்காலத்தை இழக்கமுன்னர், ஜனாதிபதி சந்திரிகா நாடாளுமன்றத்தை கலைத்தது என்பது உலகத்தில் வரலாற்று ரீதியில் இதுதான் முதற்தடவையாகும். மக்கள் - ஐக்கிய தேசியக்கட்சியை ஆறு ஆண்டுகள் ஆட்சி செய்யவே ஆணை வழங்கினார்கள். ஆனால், ஜனாதிபதி தற்போது நாடாளுமன்றைக் கலைத்தது தேவையில்லாத ஒருவிடயமாகும்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் நாடாளுமன்றில் பெரும்பான்மைப்பலம் இழக்கும்வரை நாடாளுமன்றைக் கலைக்கமாட்டேன் என சில மாதங்களுக்கு முன் ஜனாதிபதி எழுத்து மூலம் அறிவித்திருந்தார். ஆனால், நாடாளுமன்றில் ஐக்கிய தேசிய முன்னணி பெரும்பான்மையை தொடர்ந்து வைத்திருந்தபோதும், ஜனாதிபதி நாடாளுமன்றைக் கலைத்துள்ளார்.

கடந்த இரண்டு வருடகாலத்தில் அரசாங்கம் சகல வழிகளிலும் நன்றாகவே செயற்பட்டது. சமாதான முயற்சிகள் நல்ல முறையில் முன்னெடுக்கப்பட்டன. அபிவிருத்திப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன. பணவீக்கத்தை நாம் கட்டுப்படுத்தியுள்ளோம். எனவே, நடைபெறப்போகும் தேர்தல் தொடர்பாக நாம் பீதியடையவில்லை என சேனாரத்தின தெரிவித்தார்.

## விறகு வெட்டச்சென்ற 5 ஊர்காவலர்கள் தடுப்பு!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள மகாஓயா - வீரஅரந்தலாவ காட்டுப் பகுதியில் விறகு வெட்டச்சென்ற 5 ஊர்காவற்படையினர் புலிகளால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இது குறித்து இராணுவ வட்டாரங்கள் தகவல் தருகையில், கடந்த 7 ஆம் திகதி காட்டுக்கு விறகுவெட்டச் சென்ற ஊர்காவற்படையினரான ராமநாயக்க, சமரசிங்க, மகிந்த, ஆரியரத்தின, புஞ்சிபண்டா ஆகிய ஐவரும் தம்பிட்டியப் பகுதியிலிருந்து சென்றனர்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியான காட்டுப்பகுதிக்குச் சென்ற இவர்களைத் தடுத்துவைத்த புலிகள், நான்கு மணிநேர விசாரணையின் பின்னர் விடுவித்தனர்.

## இசை வேள்வி

யாழ்.மத்திய கல்லூரி கவின் கலை மன்றத்தினால் நடத்தப்படும் இசைவேள்வி நிகழ்வு இன்று நண்பகல் 1 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம் பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

# தேர்தலைக் கண்காணிக்க 100 வெளிநாட்டவர்கள்!

## பவ்ரல் அமைப்பு அழைத்துவரும்

எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம்திகதி நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலை, கண்காணிப்பதற்கான பணியில் பவ்ரல் அமைப்பு நூறு வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை அழைக்கவுள்ளது.

இது தொடர்பாக பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் கிங்ஸ்லி றொட்றிகோ தகவல் வெளியிடுகையில், தற்போது பதினான்கு வெளிநாட்டுக் காண்காணிப்பாளர்கள் நாட்டில் இருக்கின்றனர். அவர்கள், தேர்தல் கண்காணிப்பு தொடர்பான விடயங்களை கடந்த மூன்று மாதங்களாக தயாரித்து வருகின்றனர்.

கடந்த நவம்பர் மாதம் முதல் இங்கு நிலவும் அரசியற்சூழல் - பெருமளவான அரசியல் வன்முறைகள் இடம்பெறுவதற்கான சாத்தியங்களை உருவாக்கிவருகிறது.

இதனால் நாடு முழுவதிலும் இரு பதாயிரம் கண்காணிப்பாளர்களை நியமிக்க விருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கொழும்பு மாவட்டத் தலைவராக மகிந்த ராஜபக்ஷவை நியமியுங்கள்!

## சந்திரிகாவிடம் பிரமுகர்கள் கோரிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்டத் தலைவராக- எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவை நியமிக்குமாறு, கொழும்பு மாவட்ட அமைப்பாளர்களும், தொழிற்சங்கங்களும் மற்றும் அமைப்புக்களும் ஜனாதிபதி சந்திரிகாவிடம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளன.

கொழும்பைத் தளமாகக்கொண்ட இந்த அமைப்புக்கள் - ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பியிருக்கும் கடிதத்தில் - ஐக்கிய தேசியக்கட்சி கொழும்பு மாவட்டத்தில் பலமான நிலையில் இருக்கின்றது. இதனால், ஐக்கிய தேசியக் கட்சிக்கு சவாலாக விளங்கக்கூடிய தலைவர் ஒருவரை நியமிக்க வேண்டியது அவசியமாகும். இதற்குப் பொருத்தமான நபர் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷதான் என்று கூறப்பட்டிருக்கிறது.

இதேவேளை - எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ இந்தக் கோரிக்கை குறித்து சம்பந்தப்பட்ட கட்சிப் பிரமுகர்களிடம் தனிப்பட்ட ரீதியில் மறுப்புத் தெரிவித்திருப்பதாகவும் -

தாம் தொடர்ந்து தென்பகுதி (றுகுணு) மக்களுக்காகவே சேவையாற்ற விரும்புவதாகவும் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

## வேட்பாளர் தெரிவில் கட்சிகள் மும்முரம்

(கொழும்பு)

தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும் பணியில், கட்சிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசிய கட்சியின் நிறைவேற்றுக்குழு, தேர்தல் தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு நேற்றுமுன்தினம் கூடியது.

தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிப்பதற்கே, பிரதமர் ரணிலின் தாய்லாந்திற்கான விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, அதாவுல்லா அணியினர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து ஐக்கிய தேசிய முன்னணியுடன் சேர்ந்து போட்டியிட தீர்மானித்துள்ளதாக தெரிவித்துள்ளது. ஆனால், சிறிலங்கா முஸ்லிம் காங் கிரஸ் தனித்துப் போட்டியிட தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் கூட்டணி அமைப்பதா அல்லது தனித்து போட்டியிடுவதா என்பது தொடர்பாக கலந்துரையாடவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# நாடாளுமன்றக் கலைப்பானது போர் நிறுத்தத்தை பாதிக்காது!

## கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் தெரிவிப்பு

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டாலும் தமது அன்றாடப்பணிகள் எந்தத்தடங்கலும் இன்றி தொடர்வதாக- போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிரகடோட்ரயர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தாவது,

நாட்டின் தற்போதைய அரசியல் நகர்வுகள் கண்காணிப்புக்குழுவின் செயற்பாடுகளில் எந்தத் தாக்கததையும் ஏற்படுத்தாது. போர்நிறுத்த உடன்பாட்டின்படியான பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்றுவருகின்றது.

இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு எந்தத் தலையீட்டையும் செய்யாது என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய அரசியற்சூழ்நிலையில், இனப்பிரச்சினைக்கு தீர்வுமுயற்சியில் அனுசரணையாளராகச் செயற்படும் நோர்வே அரசாங்கம், தமது பணிகளை தற்காலிமாக இடைநிறுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# திருமலை, காங்கேசன் துறைமுகங்களுக்கு இந்தியக் கடற்படைக்கலம் வருகைதரவுள்ளது!

(கொழும்பு)

காங்கேசன்துறை, திருகோணமலை கடற்படைத் துறைமுகங்களுக்கு இந்தியக் கடற்படையின் முக்கிய கடற்கலம் வருகைதரவுள்ளது.

இந்தியக் கடற்படையின் தலைமை அதிகாரி அட்மிரல் மாதவேந்திரசிங் இவ்வாரம் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவிருந்து பின்னர் ரத்துச் செய்யப்பட்டிருந்தது.

இவரது பயணத்தின் தொடர்ச்சியாக இந்தியக் கடற்படையின் முக்கிய கடற்கலம் ஒன்று, கொழும்பு மற்றும் காங்கேசன்துறை, திருகோணமலை ஆகிய துறைமுகங்களுக்கு வருவதாக திட்டமிடப்பட்டிருந்தது.

இந்தியக் கடற்படை தலைமை அதிகாரி மாதவேந்திரசிங் யாழ்ப்பாணத்தில் 1987 இல் இந்திய இராணுவத்தினர் மேற்கொண்ட 'பவான்' நடவடிக்கையில் கடற்படையின், விமானப்படைப்பிரிவு விமானங்களை விராட் விமானம் தாங்கிக் கப்பலிருந்து நெறிப்படுத்தியிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை வரும் அவுஸ்ரேலிய அணியில் பெவன், ஹடின் இருவரும் இணைப்பு!

(கொழும்பு)

இலங்கைக்கு இந்த மாதம் விஜயம் செய்யவுள்ள அவுஸ்ரேலிய அணியின் ஒருநாள் போட்டி வீரர்களில் மைக்கல் பெவனும் விக்கெட் காப்பாளர் பிறட் ஹடினும் மேலதிக வீரர்களாக இணைக்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்ரேலியாவில் நடந்த முக்கோணத் தொடரில் பெவன் எலும்பு முறிவு காரணமாக இந்தியாவுடனான இறுதிப் போட்டிகளில் விளையாடவில்லை. தற்போது பெவன் குணமடைந்துள்ளதால், இலங்கைக்கான விஜயத்தில் இணைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக, அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணித் தெரிவாளர் ரேவர ஹோன்ஸ் தெரிவிக்கையில் இலங்கையில் இந்த மாதம் 20 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஒருநாள் போட்டித் தொடர் அவுஸ்ரேலிய வீரர்களுக்கு மிகப் பெரிய சவாலாகும்.

அத்துடன், இந்தப் பிராந்தியத்தில் விளையாடுவதென்பது அவுஸ்ரேலிய வீரர்களுக்கு ஒரு பெரிய சவாலாகும். ஆனாலும், அணியில் இடம்பெற்றுள்ள 15 வீரர்களும் தேவையான விதத்தில் தமது திறமையை வெளிப்படுத்துவார்கள்.

அத்துடன், மைக்கல் பெவன் காயத்திலிருந்து குணமடைந்து அணிக்குத் திரும்பியிருப்பது நல்ல விடயமாகும். விக்கெட் காப்பாளரான கில்கிறிஸ்ட்டிற்கு துணையாக பிறட் ஹடின் இணைக்கப்பட்டிருப்பது மிகத் தேவையானதென்றே நாம் கருதுகின்றோம்.

பிறட் ஹடினின் விக்கெட் காப்பாளர் முறை நன்றாகவுள்ளது. நடந்து முடிந்த வி.பி. கிண்ணத் தொடரில் இவரது அனுபவ ரீதியான விளையாட்டு மூத்த வீரர்களுக்கு மிகவும் உதவியாக இருந்தது.

பந்து வீச்சாளரான அன்ரி பிக்கலுக்கு பதிலாக வேகப்பந்து வீச்சாளர் மைக்கல் ஹாஸ்பிறோவிஷ் அணியில் சேர்கப்பட்டுள்ளார். இவர் வி.பி. கிண்ணத் தொடரில் இரண்டு ஆட்டங்களிலும் விளையாடவில்லை.

இவர் முன்னர் விளையாடிய போட்டியில் விக்கெட்டை வீழ்த்தியிருந்தார். இவரது சேவை நீண்ட கால நோக்கில் முதற்தரமாக அமையும் எனத் தெரிவித்தார்.

இலங்கைக்கு வரவுள்ள அவுஸ்ரேலிய அணியின் டெஸ்ட் வீரர்கள் 15 பேரின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவர்களின் விபரங்கள் வருமாறு,

அணித் தலைவர் ரிக்கி பொண்டிங், துணைத் தலைவர் கில்கிறிஸட், மைக்கல் பெவன். மைக்கல் கிளாக், ஜிலெஸ்பி, பிறட் ஹடின், இயன் காவி, மத்யூ ஹைடன், பிறட் ஹொக், மைக்கல் ஹாய்ஸ்றோவிஷ், சைமன் ஹட்ரிச், பிரட் லீ, டேமியன் மார்ட்டின், அன்ரூ சைமன்ஸ், பிறட் வில்லியம்ஸ்

இந்தப் பெயர் விபரத்தில் கிளென் மக்ரா, ஷேன் வோர்ன் ஆகியோரின் விபரங்கள் இடம் பெறவில்லை.

## வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்த சென்.பற்றிக்ஸ், கொக்குவில் இந்து போட்டி

யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்றவருகின்ற கிரிக்கெட் போட்டித் தொடரில், கடந்த வார இறுதியில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சென் பற்றிக்ஸ் அணிக்கும் கொக்குவில் இந்துக்கல்லூரி அணிக்கும் இடையே நடைபெற்ற போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென் பற்றிக்ஸ் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து 248 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுஜீபன் 40 ஓட்டங்களையும், லொயிட் 34 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணியைச் சேர்ந்த கிருபன், செந்தூரன் ஆகியோர் முறையே 52 ஓட்டங்களுக்கும், 64 ஓட்டங்களுக்கும் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து முதலாவது இனிங்சை ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 143 ஓட்டங்களை மட்டுமே பெற்றமையால் இரண்டாவது இனிங்சை தொடர்ந்து ஆடுமாறு பணிக்கப்பட்டது.

இந்த 143 ஓட்டங்களில் கொக்குவில் அணித் தலைவர் மதூஷன் 41 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். சென். பற்றிகஸ் வீரர் லொயிட், சுஜீவன் ஆகியோர் முறையே 29, 33 ஓட்டங்களைக் கொடுத்து தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இரண்டாவது இனிங்சை தொடர்ந்து ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி திறமையாக ஆடி 300 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதில் மதூஷன் 93 ஓட்டங்களையும் ஐங்கரன் 60 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். இதில் சுஜீவன் 49 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பின்னர், இரண்டாவது இனிங்சை ஆடத் தொடங்கிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 3 விக்கெட் இழப்புக்கு 55 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது குறிப்பிட்ட நேரம் முடிவடைந்தமையால் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. (58)

# விளையாட்டு

## சங்கானைக் கோட்ட துடுப்பாட்டப் போட்டி

வலிகாமம் கல்விவலய சங்கானை கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மென்பந்து துடுப்பாட்ட போட்டிகள், இந்த மாதம் 3 ஆம் திகதி ஆரம்பமாகி வட்டு. மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

இந்தப் போட்டியின் அரையிறுதி ஆட்ட போட்டிகள் கடந்த 6 ஆம் திகதி கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா தலைமையில் நடைபெற்றன.

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, வட்டு. இந்துக்கல்லூரி ஆகியன அரையிறுதிப் போட்டியில் வெற்றிபெற்றதோடு, இந்த மாதம் 17 ஆம் திகதி நடைபெறும் சங்கானை கோட்டமட்டத்திலான மென்பந்து துடுப்பாட்ட இறுதிப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ளதாக விளையாட்டு செயலாளர் நா.தனபாலசிங்கம் தெரிவித்தார். (118)

## கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் சம்பியன்

தமிழீழ விளையாட்டுத் துறையின் ஆதரவில் - மகளிருக்கான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி, கடந்த 12 ஆம் திகதி யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து, ஆர்.டி.எஸ். விளையாட்டுக் கழகம் மோதியது. ஐந்து சுற்றுக்களில் 3 சுற்றுக்களில், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வென்று சாம்பியன் பட்டத்தை தனதாக்கிக் கொண்டது. (12)

## சாதனை முறியடிப்பு

யாழ். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் - 1978 ஆம் ஆண்டு 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் வி.பாக்கியராஜா என்ற மாணவன் 34.06 மீற்றர் தூரத்தை எறிந்து நிகழ்த்திய சாதனையை, இந்த ஆண்டு பிரேமதீபன் என்ற மாணவன் 41.07 மீற்றர் தூரம் எறிந்து 26 வருடங்களின் முன்னர் ஏற்படுத்திய சாதனையை முடியடித்தார்.(12)

## பரபரப்பான கிரிக்கெட் போட்டியில் கொக்குவில் இந்து அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைக்களுக்கிடையே நடைபெற்றுவரும் கிரிக்கெட் போட்டித் தொடரில் கடந்த வெள்ளி, சனி ஆகிய தினங்களில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற விறுவிறுப்பான போட்டியில் ஒரு விக்கெட்டால் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி கல்லூரி அணி 195 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சாம்சன் 74 ஓட்டங்களையும் வசீகரன் 32 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். கொக்குவில் இந்துக் கல்லூரி வீரர் பிரகாஷ் 30 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். தொடர்ந்து ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 154 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லவகாந் 35 ஓட்டங்களையும், ஐங்கரன், மதூஷன் ஆகிய இருவரும் 33 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். ஸ்ரான்லிக் கல்லூரி அணி வீரர் ரஜீவ்கான் சாம்சன் ஆகியோர் 79 ஓட்டங்களுக்கும் 53 ஓட்டங்களுக்கும் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதைத் தொடர்ந்து 2 ஆவது இனிங்சை ஆடிய ஸ்ரான்லிக் கல்லூரி 115 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதில் ரஜீவ்குமார் 21 ஓட்டங்களையும் ஜதீஸ் 29 ஓட்டங்களையும் பெற்றனர். கொக்குவில் இந்துக் கல்லூரி பிரகாஷ், செந்தூரன் ஆகியோர் 3 விக்கெட்டுக் களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து 147 ஓட்டங்களை பெற்றால் வெற்றி பெறலாம் என்ற நிலையில் ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி ஒரு கட்டத்தில் 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 134 ஓட்டங்களைப் பெற்றிருந்தபொழுதும் இறுதியில் 147 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டை இழந்து ஒரு விக்கெட்டால் இந்த விறுவிறுப்பான போட்டியில் வெற்றிபெற்றது. (58)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(அராலி)

வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டிகள், இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ச.இராமலிங்கம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில், விருந்தினர்களாக வலி. மேற்கு பிரதேசசெயலர் சி.ர. மோகன்ராஸ், இளைஞர் சேவைகள் மன்றப் பணிப்பாளர் சி.சிவதட்சணமூர்த்தி, ஓய்வுபெற்ற அதிபர் ந.ஜெயநாயகம் ஆகிபோர் கலந்துகொள்ளவுள்ளனர். (118)

## வடமராட்சி வலய சதுரங்க போட்டி

நெல்லியடி சயன்ஸ் அக்கடமி ஆதரவில் கடந்த 5 ஆம் திகதி நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையில் நடைபெற்ற - வடமராட்சி வலய மட்ட பாடசாலைகளுக்கிடையில் 15 வயதுக்குட்பட்ட பிரிவினருக்கான சதுரங்கப் போட்டியில், ஆண்கள் பிரிவில் ஹாட்லிக் கல்லூரி முதலாம்இடத்தையும், ஞானசாரியார் கல்லூரி இரண்டாம் இடத்தையும், விக்னேஸ்வராக் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றன.

பெண்கள் பிரிவில், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் முதலாம் இடத்தையும், வட.. இந்து மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தையும், ஞானசாரியார் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றன.

இந்தப் போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களாக கப்புது ஏகாம்பர வித்தியாலய ஆசிரியர் சி.விஜயகுமார், யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் கே.சிவசுதன் ஆகியோர் கடமையாற்றினார்கள்.

போட்டிகளின் முதல் இரு இடங்களைப் பெற்ற பாடசாலைகள் யாழ். மாவட்டப் போட்டிக்குச் செல்லவுள்ளன எனவும் வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.வல்லிபுரம் தெரிவித்தார்.(12)

## விக்னேஸ்வராக் கல்லூரியில் சாதனைகள் முறியடிப்பு!



கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் நிகழ்வின் 19 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான ஈட்டிஎறிதல் போட்டியில் 1998 ஆம் ஆண்டு ஏ.பிரபாளினி என்ற மாணவி 11.24 மீற்றர் எறிந்து நிகழ்த்திய சாதனையை இந்த ஆண்டு ரி.தர்ஷிகா என்ற மாணவி 16.07 மீற்றர் தூரம் எறிந்து முன்னைய சாதனையை முறியடித்தார்.

21 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் 2000 ஆம் ஆண்டு வி.யோகேஸ்வரன் என்ற மாணவன் 5 அடி 1 அங்குலம் பாய்ந்து நிகழ்த்திய சாதனையை, இந்த ஆண்டு ஏ.அமல்ராஜ் என்ற மாணவன் 5 அடி 7 அங்குலம் பாய்ந்து முறியத்தார்.

இந்த விளையாட்டுப் போட்டியில் சிற்றம்பலம் (சிவப்பு) இல்லம் 354 புள்ளியைப் பெற்று முதலாம் இடத்தையும், கிருஷ்ணபிள்ளை (மஞ்சள்) இல்லம் 307 புள்ளியைப் பெற்று இரண்டாம் இடத்தையும், சின்னத்தம்பி (பச்சை) 306 புள்ளியைப் பெற்று மூன்றாம் இடத்தையும், இராமசாமி (நீலம்) இல்லம் 288 புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்தையும் பெற்றன.(12)

# பா.ஜ. கூட்டணியிலிருந்து இன்னொரு கட்சி வெளியேறியது

(சென்னை)

பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியிலிருந்து இந்தியத் தேசிய லோக் தளம் நேற்று முன்தினம் விலகியது.

இந்தத் தகவலை அந்தக் கட்சியின் தலைவரும், ஹரியானா முதலமைச்சருமான ஓம்பிரகாஷ் சவுதாலா நேற்றுமுன்தினம் கர்கன்யான் என்ற இடத்தில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

பாரதீய ஜனதா, கூட்டணி தர்மத்தைக் கடைப்பிடிக்காததால் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து விலகுவதாகவும், இந்த விலகல் முடிவை மறுபரிசீலனை செய்யும் கேள்விக்கே இடமில்லை என்றும் அப்போது அவர் கூறினார்.

நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியத் தேசிய லோக்தளம் தனித்துப் போட்டியிடும் என்றும், காங்கிரஸுடன் கொள்கை வேறுபாடு இருப்பதால் அந்தக் கட்சியுடன் கூட்டணி வைக்க மாட்டோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்திய தேசிய லோக்தளம் கட்சி விலகியது ஹரியானாமாநிலத்தில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு ஏற்பட்ட பின்னடைவாகக் கருதப்படுகிறது.

# இந்திராகாந்தியின் இன்னொரு பேரன் பாரதீய ஜனதாவுக்காக களம் இறக்கம்!

ராகுல், பிரியங்காவின் பிரசாரத்தை முறியடிக்க இந்திரா காந்தியின் மற்றொரு பேரரான வருண் காந்தியை களமிறக்க பா.ஜ. திட்டமிட்டுள்ளது.

சோனியா காந்தியின் மகன் ராகுல், மகள் பிரியங்கா ஆகியோர் காங்கிரஸுக்காக பிரசாரம் செய்து வருகிறார்கள். சமீபத்தில் அவரது தாயார் தொகுதியான அமேதியில் பிரசாரம் செய்த அவர்களுக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்தது.

அவர்களுடைய பிரசாரத்தை முறியடிப்பதற்காக, இந்திரா காந்தியின் மற்றொரு பேரனும் மேனகா காந்தியின் மகனுமான வருண் காந்தியை பிரசாரத்தில் ஈடுபடுத்த பா.ஜனதா திட்டமிட்டுள்ளது.

வருண் காந்தி ஏற்கனவே பிலிபட் (உத்ராஞ்சல்) தொகுதியில் தாயார் மேனகாவுக்காக தீவிர பிரசாரம் செய்திருக்கிறார். பா.ஜனதா விருப்பத்தின்படி அந்தக் கட்சியை ஆதரித்து பிரசாரம் செய்ய வருண் காந்தி சம்மதம் தெரிவித்துவிட்டார்.

மேனகா காந்தியும் பா.ஜனதா கட்சியில் சேர முடிவுசெய்திருப்பதாக தெரிகிறது. ஆனால், மகன் வருணைப் போல் பா.ஜனதாவை ஆதரித்து பரசாரம் செய்வாரா என்று தெரியவில்லை.

# மீண்டும் லக்னோவில் பிரதமர் வாஜ்பாய் போட்டி

பிரதமர் வாஜ்பாய் வருகிற நாடாளுமன்ற தேர்தலில் உத்தரப் பிரதேச மாநில லக்னோ தொகுதியிலிருந்தே, மீண்டும் போட்டியிடுகிறார். லக்னோ தொகுதியைச் சேர்ந்த பாரதீய ஜனதா தலைவர்களும், தொண்டர்களும் டெல்கியில் பிரதமர் வாஜபாயை அவருடைய வீட்டில் சந்தித்துப் பேசினார்கள்.

அப்போது, மீண்டும் லக்னோ தொகுதியில் போட்டியிடும்படி அவரிடம் வலியுறுத்தினார்கள். லக்னோவில் போட்டியிடுவதை உறுதிப்படுத்தும் வகையில், வாஜ்பாய் அவர்களிடம் பதில் அளித்தார்.

'நான் உங்கள் தொகுதிக்கு அடிக்கடி வரவில்லை என்பது உண்மைதான். நான்தான் குற்றவாளி. மீண்டும் லக்னோவில் இருந்து என்னைத் தேர்ந்து எடுத்து அனுப்பினால் அடிக்கடி அங்கு வருவேன்' என்று வாஜ்பாய் குறிப்பிட்டார்.

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தர)ப் பரீட்சை

## வணிகக்கல்வி

### (முகாமைத்துவ விதிகள்)

01. வளங்களை விரயமாக்காது இழிவுக் கிரயத்துடன் பயன்படுத்துவது?
1. வினைத்திறன் 2. விளைதிறன் 3. உள்ளீடு
4. வெளியீடு 5. கொள்கை

02. அமைப்பின் இலக்கை அடையும் பொருட்டு கருமமாற்றுவதற்கு வழிகாட்டுவது
1. வினைத்திறன் 2. விளைதிறன் 3. உள்ளீடு
4. வெளியீடு 5. கொள்கை

03. அமைப்பின் நோக்கத்தை குறித்தமுறைப்படி நிறைவேற்றுவது ......... ஆகும்.
1. வினைத்திறன் 2. விளைதிறன் 3. உள்ளீடு
4. வெளியீடு 5. கொள்கை

04. ஒரு அமைப்பு பின்பற்றும் எண்ணக்கருக்கள் (Concepts) ....... ஆகும்.
1. வினைத்திறன் 2. விளைதிறன் 3. உள்ளீடு
4. வெளியீடு 5. கொள்கை

05. ஒரு அமைப்பினால் அடையப்பெற்ற அதன் நோக்கமும், இலக்கும் ....... ஆகும்.
1. வினைத்திறன் 2. விளைதிறன் 3. உள்ளீடு
4. வெளியீடு 5. கொள்கை

06. அமைப்பில் உள்ள மனித வளத்திற்கு வழிகாட்டியாக அமைவது.
1. வினைத்திறன் 2. விளைதிறன் 3. உள்ளீடு
4. வெளியீடு 5. கொள்கை

07. அமைப்பின் இலக்கை நிர்ணயித்து, அதனை அடைவதற்கு வளங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டுமென்பதை நிர்ணயிப்பது.
1. திட்டமிடல் 2. ஒழுங்கமைத்தல் 3. தலைமைவகித்தல்
4. கட்டுப்படுத்தல் 5. திறமை

08. குறைந்தளவு வளங்களைப் பயன்படுத்தி கூடியளவு வெளியீடுகளை உற்பத்தி செய்வது.
1. திட்டமிடல் 2. ஒழுங்கமைத்தல் 3. தலைமைவகித்தல்
4. கட்டுப்படுத்தல் 5. திறமை

09. இலக்கை அடையும் பொருட்டு செயற்பாடுகளை ஒதுக்கீடு செய்வதும், அவற்றைத் தொகுதிகளாக வகுப்பதும் வளங்களை ஒதுக்கீடு செய்வதும்
1. திட்டமிடல் 2. ஒழுங்கமைத்தல் 3. தலைமைவகித்தல்
4. கட்டுப்படுத்தல் 5. திறமை

10. இலக்கை அடையும் பொருட்டு ஊழியர்களிடமிருந்து தன்னிச்சையான ஒத்துழைப்பைப் பெறும் பொருட்டு அவர்களை ஊக்குவிப்பது.
1. திட்டமிடல் 2. ஒழுங்கமைத்தல் 3. தலைமைவகித்தல்
4. கட்டுப்படுத்தல் 5. திறமை

11. அமைப்பு அதன் இலக்கை அடைந்து கொள்ளுவதற்கான சரியான பாதையில் செல்வதனை உறுதி செய்யும் நடவடிக்கை
1. திட்டமிடல் 2. ஒழுங்கமைத்தல் 3. தலைமைவகித்தல்
4. கட்டுப்படுத்தல் 5. திறமை

12. முகாமைச் செயற்பாடுகள் என்ற தொகுதியில் அடக்கப்பட முடியாதது
1. திட்டமிடல் 2. ஒழுங்கமைத்தல் 3. தலைமைவகித்தல்
4. கட்டுப்படுத்தல் 5. திறமை

13. குறிக்கோள்களைத் தீர்மானிப்பதற்கும் கொள்கைகளை விருத்தி செய்வதற்கும் பொறுப்பாகவிருப்பது
1. இயக்குநர்களின் சபை
2. பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்
3. சிரேஷ்ட முகாமையாளர் 4. நடுமுகாமையாளர்
5. மேற்பார்வையாளர்

14. பொதுவாக முதல் வரிசை முகாமையாளராகக் கருதப்படுபவர்.
1. இயக்குநர்களின் சபை
2. பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்
3. சிரேஷ்ட முகாமையாளர் 4. நடுமுகாமையாளர்
5. மேற்பார்வையாளர்

15. தொழிற்பாட்டு உத்தியோகத்தர்களை வழிநடத்தும் பணியில் ஈடுபடுபவர்
1. இயக்குநர்களின் சபை
2. பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்
3. சிரேஷ்ட முகாமையாளர் 4. நடுமுகாமையாளர்
5. மேற்பார்வையாளர்

16. தொழிற்பாட்டு குறிக்கோளுக்கமைய பகுதித் தலைவரின் செயற்பாடுகளை இயைபாக்குவதில் ஈடுபடுபவர்
1. இயக்குநரகளின் சபை
2. பிரதம நிறைவேற்று உத்தியோகதகர்
3. சிரேஷ்ட முகாமையாளர் 4. நடுமுகாமையாளர்
5. மேற்பார்வையாளர்

17. குறித்த நிறுவனம் சமார் இருபது வருடகாலத்தில் அடைந்து கொள்ள எதிர்பார்ப்பது?
1. தொலைநோக்கு 2. இலட்சியநோக்கு
3. நோக்கங்கள் 4. குறிக்கோள்கள் 5. விதிகள்

18. நிறுவனத்தின் தொழில் எது? அதன் வாடிக்கையாளர்கள் யார்? அதன் தொழில் என்னவாக இருக்கவேண்டும் போன்ற வினாக்களுக்கு விடை காட்டுவதாக அமைவது?
1. தொலைநோக்கு 2. இலட்சியநோக்கு 3. நோக்கங்கள்
4. குறிக்கோள்கள் 5. விதிகள்

19. நிறுவனம் அடுத்த வருடம் 100000 அலகுகளை உற்பத்தி செய்ய வேண்டுமென்பது ............ ஆகும்.
1. தொலைநோக்கு 2. இலட்சியநோக்கு 3. நோக்கங்கள்
4. குறிக்கோள்கள் 5. விதிகள்

20. நிறுவனம் செய்ய வேண்டியவற்றை திட்டவட்டமாக விபரிப்பது .......... ஆகும்.
1. தொலைநோக்கு 2. இலட்சியநோக்கு 3. நோக்கங்கள்
4. குறிக்கோள்கள் 5. விதிகள்

21. ஒழுங்கமைத்தலின் தத்துவங்களில் ஒன்றாக அமையக் கூடியது?
1. சூழல் ஆய்வு 2. நிர்வாகக்கட்டமைப்பு 3. விசால அளவு
4. வலு 5. நியமமாக்கல்

22. திட்டமிடுதல் நடவடிக்கைகளில் இடம்பெறும் ஓர் அம்சம்
1. சூழல் ஆய்வு 2. நிர்வாகக்கட்டமைப்பு 3. விசால அளவு
4. வலு 5. நியமமாக்கல்

23. கட்டுப்படுத்தல் நடவடிக்கைகளில் இடம்பெறும் ஒரு அம்சம் ........... ஆகும்.
1. சூழல் ஆய்வு 2. நிர்வாகக்கட்டமைப்பு 3. விசால அளவு

**B.S.பசில்**
**உடுவில் மகளிர் கல்லூரி**

இங்கே மடிக்கவும்



மாணவர் மலர்

## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2004

▼ 1 ஆம் 2 ஆம் 3 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களை ஆறுவகைச் சொற்களில் ஒன்றைக் குறிக்கும். அதன் சரியான விடையின்கீழ் கோடு இடுக.

01. புத்தகம், மேசை, யானை
(1) இடப்பெயர் (2) குணப்பெயர் (3) பொருட்பெயர்

02. வாய், மலர், காய்
(1) சினைப்பெயர் (2) காலப்பெயர் (3) தொழிற்பெயர்

03. கொழும்பு, பஸ்நிலையம், காலி
(1) காலப்பெயர் (2) பொருட்பெயர் (3) இடப்பெயர்

04. கண்ட இடங்களில் குப்பைகளைப் போடுவதைத்தவிருங்கள் என்பதில் உள்ள எழுவாய்
(1) கண்ட (2) இடங்களில் (3) நீங்கள்

05. ஐவகை நிலங்களில் ஒன்று
(1) மருதம் (2) களஞ்சியம் (3) அந்தப்புரம்

06. மனம் உடைந்துபோதல் என்பது
(1) சந்தோஷம் (2) துன்பப்படுதல் (3) மனம் உடைந்தது

07. செல்கிறான் என்பது
(1) இறந்தகாலம் (2) எதிர்காலம் (3) நிகழ்காலம்

08. வெண்டாமரை என்பதைப் பிரித்து எழுதினால்
(1) வெள்ளை + தாமரை (2) வென்மை + தாமரை
(3) வெண்மை + தாமரை

09. காகம் கனிந்த பழத்தைக் கொத்தித் தின்றது. இதில் உள்ள பயனிலை அடைமொழி
(1) காகம் (2) கொத்தித் (3) கனிந்த

10. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை
(1) 12 (2) 247 (3) 18

11. ஒரு முக்கோணத்திற்கு எத்தனை பக்கங்கள் உண்டு?
(1) 4 (2) 6 (3) 3

12. பி.ப 5.25 ஐ நியமக் கடிகார நேரத்தில் எழுதினால்,
(1) 5.25 மணி (2) 17.25 மணி (3) 17.25 மணி

13. 2 மீற்றரில் உள்ள சென்றி மீற்றர்களின் அளவு
(1) 20 (2) 200 (3) 2000

14. சூரியன் உதிக்கும் திசைக்கு எதிர்த்திசை
(1) கிழக்கு (2) மேற்கு (3) வடக்கு

15. 4835 என்பதில் நான்கு என்னும் இலக்கம் குறிப்பது
(1) 400 (2) 4000 (3) 40000

▼ 16 ஆம் 17 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள கூடுகளில் குறுக்காகவும் மேலிருந்து கீழாகவும் மூன்று எழுத்துக்கள் கொண்ட மூன்று சொற்கள் உருவாகும் வகையில் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து அதன்கீழ் கோடு இடுக.

16.

| | | |
|---|---|---|
| அ | | து |
| சோ | | ம் |
| கு | | பி |

(1) மு க வை (2) மு ட ம் (3) மு க ம்

17.

| | | |
|---|---|---|
| உ | ம | து |
| | | |
| வ | ம் | பு |

(1) தரம் (2) தவம் (3) தகுதி

▼ இல 18 முதல் 20 வரையிலான வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

18. மரம், புத்தகம், ஆசிரியர் என்பன எவ்வகைச் சொற்கள்
.................................................

19. படித்து, எழுந்து, விழுந்து என்பன எவ்வகைச் சொற்கள் ஆகும்
.................................................

20. ஓடி ஓடி, பாம்பு பாம்பு, ஐயோ ஐயோ என்பது எவ்வகைச் சொற்களாகும்
.................................................

▼ இல.21 முதல் 24 வரையுள்ள வினாக்களில் உள்ள சொல் வரிசைகளில் ஏனைய சொற்களுடன் பொருந்தாத சொல் இடம்பெறும் சொல்வரிசையின் கீழே கோடு இடுக.

21. (1) கரட், பீற்றூட், கிழங்கு, உருளைக்கிழங்கு
(2) வெள்ளை, கறுப்பு, பச்சை, மஞ்சள்
(3) கதிரை, மேசை, வாங்கு, கட்டில்

22. (1) புல்லாங்குழல், நாதஸ்வரம், மேளம், தபேலா
(2) சுறா, அறக்குளா, மீன், சூரை
(3) துடுப்பாட்டம், உதைபந்து, கரப்பந்து, ஹொக்கி


23. (1) பனை, தென்னை, வாழை, கமுகு
(2) கிளி, மைனா, குயில், காகம்
(3) சிங்கம், புலி, விலங்குகள், கரடி

24. (1) மா, பலா, வேம்பு, முதிரை
(2) கார், பஸ், போக்குவரத்துச்சாதனம், லொறி
(3) பசு, ஆடு, குதிரை, முயல்

▼ பின்வரும் இசைக்கருவிகளின் பெயர்களை எழுதுக

25.

.................................

26.

.................................

27.

.................................

28.

.................................

▼ பின்வரும் ஒவ்வொரு புதிரிலும் மறைந்துள்ள சொற்களைக் கண்டுபிடித்து அதனைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

29. இது மூன்று எழுத்துக்களைக்கொண்ட சொல்லாகும். முதலெழுத்து மானத்தில் உண்டு. மனத்தில் இல்லை. இரண்டாம் எழுத்து வானத்தில் உண்டு. வாக்கில் இல்லை. மூன்றாம் எழுத்து கொம்பில் உண்டு கொக்கில் இல்லை.
.................................................

30. இது நான்கு எழுத்துக்களைக்கொண்ட சொல்லாகும். முதலெழுத்து தானியத்தில் உண்டு தங்கத்தில் இல்லை. இரண்டாம் எழுத்து தவத்தில் உண்டு தனிமையில் இல்லை. மூன்றாவது எழுத்து அரத்தில் உண்டு அங்கத்தில் இல்லை. நான்காவது எழுத்து கம்பத்தில் உண்டு குண்டியில் இல்லை.
.........................................

▼ 31 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்களில் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.

31. முதிர்ச்சியடைந்த வித்துகள்தான் கூடியவிளைச்சலைத் தரும். (......)
32. நீரில் மிதக்கும் தாவரம் ஐதரில்லா ஆகும். (......)
33. கியூலெக்ஸ் நுளம்பு ஆனைக்கால் நோயை உண்டாக்கும். (......)
34. ஒரு மீற்றர் 1000 சென்ரிமீற்றர் ஆகும். (......)
35. அலங்காரத் தையல் வகையில் ஒன்று விஸ்பம் ஆகும். (......)

36. பின்வரும் விவரணத்தை வாசித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

ஔவையார் ஒரு சிறந்த தமிழ்ப் புலவர். அவர் இயற்றிய நீதி நூல்களில் ஒன்று மூதுரையாகும். அதிலே முப்பத்தொரு பாடல்கள் உண்டு. இப்பாடல்கள் வெண்பாக்களால் ஆனவை. நாம் கடைப்பிடிக்கவேண்டிய நல்ல ஒழுக்கநெறிகள் பல அதிலே கூறப்பட்டுள்ளன. நீங்கள் கற்றுத்தெரிந்து செய்வதற்காக மூதுரையிலிருந்து ஐந்து பாடல்கள் தரப்பட்டுள்ளன.

1. புலவர் என்பதற்கு ஒத்த கருத்துள்ள சொல் ஒன்று தருக. (...........................)
2. நீதி என்பதற்கு எதிர்க்கருத்துள்ள சொல் ஒன்று தருக. (...........................)
3. மடல்கள் என்பதற்கு ஒருமைச் சொல் ஒன்று தருக. (...........................)
4. முன்னிலைப் பன்மைச் சொல் ஒன்று தருக. (...........................)
5. கூறப்பட்டுள்ள என்பதன் நிகழ்கால வடிவத்தை எழுதுக. (...........................)
6. ஔவையார் இயற்றிய நீதி நூல்கள் இரண்டு தருக. (...........................)
7. தமிழ்ப்புலவர் என்பதைப் பிரித்தெழுதுக. (...........................)
8. ஔவையார் ஓர் சிறந்த தமிழ்ப்புலவர். இவ்வாக்கியத்தில் உள்ள பயனிலை அடைமொழியாது? (...........................)
9. மூதுரையில் எத்தனை பாடல்கள் உள்ளன? (...........................)
10. மூதுரைப் பாடல்கள் எதனால் ஆனவை? (...........................)

37. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.
1. வெடித்தால்/ காற்று/ பலூன்/ வெளியேறும்/ தானே
.........................................
2. அமெரிக்காவின்/ மிலான் நகரில்/ தோமஸ் அல்வா எடிசன் பிறந்தார்/ உள்ள
.........................................


38. பின்வரும் தொடர்களை வைத்து கருத்துள்ள வாக்கியம் எழுதுக.
விடிய விடிய .........................................
மேலே மேலே.........................................

39. பின்வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்துக்களில்) எழுதுக.
கிராமம் .........................
சிவப்பு நிறம் .........................
தண்ணீர் .........................
பால் .........................


40. பின்வரும் ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லினதும் கருத்தை எழுதுக.
Birds.............................. Forest..............................
Son.............................. Balloon..............................

41. சரியான விடையின் கீழ் கோடு இடுக.
புதுவருடத்தில் (சித்திரை மாதத்தில்) பூக்கும் பூ எது?
1. தாமரை 2. முருங்கை 3. கார்த்திகைப்பூ 4. வாழை.
2. வீட்டுத்தோட்டத்திலுள்ள பூக்களை நாடிவரும் பிராணி எது?
1. மண்புழு 2. வௌவால் 3. தேனீ 4. எலி

42. சரியான நடை தொடர்பான செயற்பாட்டைக் காட்டுவது எது?



43. வகுப்பறையைச் சுத்தம் செய்வதற்குப் பயன்படுத்தும் பொருள் எது?



44. அரச இலச்சினையில் அடிப்பாகத்தில் காணப்படுபவை.
1. முருகன் - வள்ளி 2. சூரியன் - சந்திரன்
3. சிவன் - சக்தி 4. சிங்கம் - தர்மசக்கரம்.

45. இலங்கையின் தேசிய பறவை.
1. காட்டுக்கோழி 2. கிளி 3. புறா 4. மயில்.

46. விரைவாக ஆவியாகக்கூடிய திரவம் எது?
1. நீர் 2. பெற்றோல்
3. தேங்காய் எண்ணெய் 4. மண் எண்ணெய்

47. சதாரண பயணிகள் பயன்படுத்தும் பொதுவான போக்குவரத்துச் சாதனம் எது?
1. மோட்டார் வண்டி 2. ஆகாயவிமானம் 3. பேருந்து
4. மோட்டார் சைக்கிள்.

48. பயிர்ச்செய்கைக்கு உகந்த மண் எது?
1. இருவாட்டி மண் 2. மணல் மண்
3. களிமண் 4. உக்கல் மண்.

49. சாதாரண மின்சுற்று ஒன்றை அமைக்கத் தேவையான பொருட்கள்.
1. மின்கலம், மின்குமிழ்
2. மின்கலம், மின்குமிழ், செப்புக்கம்பி
3. மின்கலம், காந்தம், பாதுகாப்பான செப்புக்கம்பி
4. மின்கலம், மின்குமிழ், பாதுகாப்பான செப்புக்கம்பி

50. காதுகளை மையமாகக் கொண்ட தகவல் ஊடகம் எது?
1. தொலைபேசி 2. பத்திரிகை
3. தொலைக்காட்சி 4. கணினி.

(தொடரும்...)

T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்

இங்கே மடிக்கவும்



# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2004 - ஏப்ரல்

## அளவையியலும், விஞ்ஞானமுறையும்

### பகுதி - 1

01) அ) பின்வரும் எடுப்பு முரண்பாட்டு அனுமானங்கள் சரியானதா? தவறானதா?
1. சில மீன்கள் நீந்துவன எனின் சில மீன்கள் நீந்துவன அல்ல என்பது பிழை
2. எந்த மீன்களும் நீந்துவன என்பது பிழை எனின் சில மீன்கள் நீந்துவன அல்ல என்பதை உறுதி செய்யமுடியாது.
3. எல்லா மீன்களும் நீந்துவன எனின் ஒவ்வொரு மீன்களும் நீந்துவன அல்ல என்பது சரியானது.
4. ஒரு மீனைத் தவிர மற்றதெல்லாம் நீந்துவன எனின் எல்லா மீன்களும் நீந்துவன என்பது பொய்.

ஆ) பின்வரும் எடுப்பு முரண்பாட்டுத் தொடர்பை விளக்குக.
1. வழிபேற்றுத் தொடர்பு
2. எதிர்மறைத் தொடர்பு

இ) எடுப்பு முரண்பாட்டு அனுமானத்தின் இருத்தல் போலி என்றால் என்ன?

ஈ) பாரம்பரிய எடுப்பு முரண்பாட்டு அனுமானத்தில் எல்லா அனுமானமும் வலிது ஆனால் தற்கால முரண்பாடுகளில் எதிர்மறை பூரணமானது என்றால் என்ன என்பதை விளக்குக.

02. அ) I எடுப்புக்கு ஏன் மறுமாற்ற எதிர்வைப்புச் செய்யமுடியாது என்பதை எதிர்மாற்ற விதிகள் மூலம் விளக்குக.

ஆ) I எடுப்புக்கு எதிர்மாறாக ஏன் A எடுப்பைப் பெறமுடியாதுள்ளது என்பதை விளக்குக?

இ) பின்வரும் வழிப்பெறுகை அனுமானங்கள் வலிதானதா வலிதற்றதா என்பதைத் துணிக?
1. சில பாம்புகள் நீளமானவை
எனின் நீளமற்றவை பாம்புகள்
2. எந்த வைத்தியரும் திறமைசாலிகள்
எனவே திறமைசாலிகள் வைத்தியர்கள்
3. எல்லா பூக்களும் அழகானவை ஆகும்
எனின் சில மலர்கள் அல்லாதன அழகற்றவை அல்ல

ஈ) எடுப்பு வெளிப்பேற்றுக்கும் அது பற்றிய தற்கால விளக்கத்துக்கும் இடையிலான வேறுபாடுகள் எவை?

உ) A,E எடுப்புக்கு எதிர்வைப்புக்கு உதாரணம் தருக.

03) பேரெடு கூற்று குறை சிற்றெடுகூற்று மறை எனும்போது வலிதான முடிவு பெறுவதற்றது என்பதை விளக்குக?

ஆ) உரு IV க்குரிய வலிதான பிரகாரங்களுக்கு உதாரணம் காட்டுக?

இ. பின்வரும் நியாயத் தொடைகளை பிரதான விதிகள் கொண்டு வலிதினை தீர்மானிக்குக. வலிதற்றதாயின் மீறப்பட்ட விதி அல்லது விதிகளை கூறுக.
1. இராணுவம் மக்களைப் போல் அமைதியானவர் அல்ல
எனவே இராணுவம் மக்கள் அல்ல.
2. பெண்களைத் தவிர வேறு எவரும் சிந்திப்பவர் அல்ல
சிந்திப்பவர் மட்டுமே ஆண்கள்
எனவே ஆண்கள் பெண்கள் ஆவர்.
3. செத்தல் மிளகாய் உறைப்பானது ஆகும்.
ஏனெனில் பச்சைமிளகாய் இனிப்பானது
என்பதுடன் செத்தல் மிளகாய் பச்சைமிளகாய் என்பதால்.

04) பின்வரும் எடுப்புக்களை சுருக்கத்திட்டத்தின் துணைகொண்டு குறிமீடு செய்து அவை வலிதானதா வலிதற்றதா என்பதை வென்வரை படத்தின்மூலம் துணிக.
1. மாரப்பனவும் கதிர்காமரும் அமைச்சர்கள் அல்ல
அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள்
எனவே கதிர்காமர் பாராளுமன்ற உறுப்பினர் அல்ல.
2. சில அறிவாளிகள் சிந்திப்பவர் என்பதுடன் சிரிப்பவர்
எல்லா அறிவாளிகளும் சிரிப்பவர்
எனவே சில சிந்திப்பவர் சிரிப்பவர்.
3. எல்லா நாய்களும் நரிகளும் ஊளையிடுவன
சில நாய்கள் நரிகள் ஆகும்
எனவே சில நரிகள் ஊளையிடுவன ஆகும்.
4. ஆசிரியர்கள் இருக்கிறார்கள்
பண்டா ஆசிரியர் அல்ல
எனவே பண்டா இருக்கிறார்.

ஆ) எல்லா மயில்களும் குயில்கள் ஆகும்.
சில குயில்கள் ஆடுவன அல்ல என்னும் எடுப்புக்களுக்கு வென் வரைபடத்தை வரைந்து பின்வரும் முடிவுகள் வலிதானதா வலிதற்றதா என விளக்குக.
1. எந்தக் குயில்களும் மயில்கள் அல்ல
2. சில குயில்கள் இல்லை
3. எந்த மயில்களும் இல்லை
4. சில மயில்கள் குயில்கள் இல்லை

### பகுதி 11

05) 1. "இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளில் ஒன்று மட்டுமே உலக கிண்ணத்தை கைப்பற்றும்" என்பதற்கு தர்க்கரீதியில் 3 குறியீட்டாக்கங்களை தருக.
2. "கென்றியும், நிமலும் பாடசாலை செல்வார் எனின் ஒன்றில் பூஜா அல்லது பட்டேல் கடற்கரை செல்வர்" எனும் கூற்று எப்போது பொய்யாகும் எனக் கூறுக.
3. இயற்கை மொழிக்கும் குறியீட்டு மொழிக்கும் இடையிலான வேறுபாடுகள் என்ன?
4. $(-P \rightarrow Q)$ என்பதற்கு அளவையியல்ரீதியில் எதிர்மறையான குறியீடு ஒன்றைத் தருக? அவை எதிர்மறை என்பதை நேர்மறை மூலம் துணிக?
5. பின்வரும் சமன்பாடுகள் சமனானதா, முரணானதா அல்லது சமனும் அல்ல முரணும் அல்ல எனக் கூறுக.
1. $[-P \rightarrow (-PvQ)], N(p \wedge -Q)$
2. $[(-Q \vee P) \rightarrow P], (PvQ) \leftrightarrow P]$
6. $[(P \rightarrow Q)v(R \wedge S)]$ என்ற கூற்றினை பொய் எனக் கொண்டு பின்வரும் குறியீடுகள் உண்மையானதா பொய்யானதா அல்லது நிச்சயிக்க முடியாதா என உண்மை அட்டவணை பயன்படுத்தாது சுருக்கமாக காட்டுக.
1. $[-P \rightarrow -(Q \wedge -R)]$
2. $[(-Q \rightarrow P) \leftrightarrow (-RvS)]$
3. $\{[(-P \rightarrow Q) \rightarrow R] \vee -(-QvS)\}$

அ) உண்மை அட்டவணை நேரல் முறையில் பெறுமதியை சோதிக்கும் பொழுது முரண்படாத சந்தர்ப்பத்தில் வாதங்கள் வலிதாக அமைவதில்லை என்பதை உதாரணம் மூலம் காட்டுக.

ஆ) பின்வரும் வாதத்தை சுருக்கத்திட்டத்தின் உதவிகொண்டு குறியீட்டில் அமைத்து அவை வலிதானதா வலிதற்றதா என்பதை உண்மை அட்டவணையின் நேர்முறை மூலம் துணிக?
சமதியும் சமனாவும் பாடசாலை செல்வர் எனின் கருணாவும், காசியும் பல்கலைக்கழகம் செல்வர் ஆயின், கருணா, காசி இருவரில் ஒருவர் மட்டும் பல்கலைக்கழகம் செல்வர்.

இ) பின்வரும் வாதங்களை குறியீட்டில் அமைத்து அவை வலிதானதா வலிதற்றதா என்பதை உண்மை அட்டவணையில் நேரல் முறை மூலம் துணிக.
1. A,B இருவரில் ஒருவர் மட்டுமே தேர்வில் சித்தி பெறுவர் எனின் ஒன்றில் C அல்லது D தேர்தலில் வெற்றி பெறுவர் எனவே D தேர்தலில் வெற்றி பெறுவர் ஆயின் A தேர்வில் சித்தி பெறமாட்டார்.
2. கொழும்பில் கடும் மழை எனின் கண்டியில் குளிர் என்பதுடன் நுவரெலியாவில் கடும் வரட்சி இருத்தல் வேண்டும் ஆனால், கொழும்பில் கடும் மழை அல்ல எனின் யாழில் கடும் மழை ஆகும். ஆதலால் ஒன்றில் கண்டியில் குளிர் அல்லது நுவரெலியாவில் கடும் வரட்சி இல்லை.

(தொடரும்...)

P.கமல்
யாழ். இந்து மகளிர் கல்லூரி

# தமிழ் காங்கிரஸ் புனரமைப்பு ;

# ஜீ.ஜீ.இற்கு செய்யும் துரோகம்!



## ஆனந்த சங்கரி கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

தமிழரசுக்கட்சியும், காங்கிரஸ் கட்சியும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் இணைந்தே தமிழர் விடுதலைக்கூட்டணி உதயமாகியது. இதுதான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வரலாறு.

ஜீ.ஜீ.பொன்னம்பலம் அமரத்துவம் அடையும்வரை, அவருடன் மிக நெருக்கமான உறவு வைத்திருந்தவன் நானே.

இவ்வாறு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைச் செயலகத்தில் இடம்பெற்ற ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் நினைவுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அந்தக் கட்சியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

இன்று தமிழ்க் காங்கிரஸ் எனக் கூறிக்கொள்ளும் முன்னணித் தலைவர்கள் எவரும் அத்தகைய உரிமையைக் கொண்டாடமுடியாது.

அரசியலில் நீண்டகாலம் உழைத்துச் சோர்ந்திருந்தவேளையில், தமிழ்நாட்டில் கலைஞர் கருணாநிதியின் வழக்கு ஒன்றில் பேசுவதற்காக அவரை சென்னைக்கு அழைத்துச்சென்று, புத்துணர்வுபெற வைத்தவனும் நான்தான்.

ஜீ.ஜீ.பொன்னம்பலம் இறக்கும்வரை தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு தனது முழு ஒத்துழைப்பைக் கொடுத்தது மட்டுமல்லாது, ஆதரவாளர் அனைவரையும் கூட்டணியிலேயே சேரவைத்து முன்நின்று உழைத்த பெரியாராவார்.

இன்று தமிழ்க் காங்கிரஸ் கட்சியை உருவாக்கி அதனைப் புனரமைப்பு செய்வது ஜீ.ஜீ.பொன்னம்பலத்திற்குச் செய்யும் துரோகச்செயலாகும்.

அத்துடன், இது அவருக்கு வழங்கும் கௌரவமுமல்ல. அவரைப் பற்றிய நினைவுகளை நடத்த அவருடன் இறுதிவரை செயற்பட்டவன் என்ற வகையில் எனக்கே உரிமையும், தகுதியும் உண்டு.

அவர் இறப்பதற்குமுன் அவருடன் தங்கி - அவருடைய மனநிலை, அரசியல் நிலைப்பாடுகள் போன்றவற்றை உணர்ந்தவன் என்ற பெருமைக்குரியவன் என்ற வகையில், இலங்கையிலுள்ள அரசியல்வாதிகள் அனைவரிலும் எனக்கு மட்டுமே அந்த உரிமை உண்டு எனவும் கூறினார்.

# அஞ்சல்மூல வாக்களிப்பு விண்ணப்பம் 14 ஆம் திகதி முதல் ஏற்றுக்கொள்ளப்படும்

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் அஞ்சல்மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் இந்தமாதம் 14 ஆம் திகதிக்கும் 21 ஆம் திகதிக்கும் இடையில் மாவட்டத் தேர்தல் ஆணையாளர்களால் ஏற்றுக்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 25 ஆம் பிரிவின்கீழ், இதற்கான விண்ணப்பங்களை தேர்தல் ஆணையாளர் விரைவில் கோரவுள்ளார். முப்படைகளின் உறுப்பினர்கள், தபால் திணைக்கள ஊழியர்கள், புகையிரதத் திணைக்களம், மத்திய போக்குவரத்துச்சபை ஊழியர்கள் மற்றும் தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ள அதிகாரிகளும் அஞ்சல்மூலம் வாக்களிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

# கருங்கல் விக்கிரகங்கள் ஆலயத்தில் திருட்டு

ஆலயமொன்றிலிருந்து இரு கருங்கல் விக்கிரகங்கள் இரவுவேளையில் திருட்டுப்போயுள்ளன. இந்தச் சம்பவம் இணுவில் காரைக்கால் சிவன் கோவிலில் இடம்பெற்றது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

கடந்த வியாழன் இரவு இந்த ஆலயத்தில் இருந்த பிள்ளையார் விக்கிரகங்கள் இரண்டு - அவை அமைந்திருந்த அடித்தளம் உடைக்கப்பட்டு திருடப்பட்டன. ஆலயச் சுற்றுப்பிரகாரத்தில் இருந்த பிள்ளையாளர் சிலையும், கொடித்தம்பத்தடியிலிருந்த பிள்ளையார் சிலையும் களவுபோயுள்ளன.

களவுபோன மறுநாள் வேறுஇரு சிலைகள் இருபத்தைந்தாயிரம் ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்டு, பிரதிஸ்டை செய்யப்பட்டது. இந்த ஆலயம் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# அரச அறிவியல் கல்வி டிப்ளோமா பயிற்சிநெறி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் இன்று அரச அறிவியல் கல்வி டிப்ளோமா பயிற்சிநெறி ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

கல்லூரியின் அதிபரும் பிராந்தியப் பணிப்பாளருமாகிய என்.யோகராஜன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - ஜேர்மன் நாட்டின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி வைத்தியர் கெரோலஸ் ரேன் மற்றும் இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர் துஷாரா, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தலைவர் எஸ்.கஜேந்திரன் உட்படப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பித்தவர்கள் மற்றும் புதிதாக இந்தப் பாடநெறியைக் கற்க விரும்புவோர் - இன்று காலை 9 மணிக்கு யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பாடநெறியைத் தொடர விரும்புவோர் - பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தல்வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# குடும்பத் தகராறு கத்திவெட்டில் முடிந்தது

கணவன் - மனைவிக்கிடையில் ஏற்பட்ட குடும்பத்தகராறு, கத்திவெட்டில் முடிந்தது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினமிரவு எட்டுமணியளவில் கோப்பாய் மத்தியில் இடம்பெற்றது.

சீவல் தொழிலை மேற்கொள்ளும் கணவர், நேற்றுமுன்தினம் இரவு மனைவியுடன் வாக்குவாதப்பட்டதுடன், மனைவியை கத்தியால் தலையில் வெட்டினார். இதனைத் தடுக்கச்சென்ற மகனும் தந்தையின் கத்திவெட்டில் இலக்காகிப் படுகாயமடைந்தார்.

இவ்வாறு கத்திவெட்டிற்கு இலக்காகி படுகாயமடைந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான ரஞ்சன் மேகலாதேவி (வயது 32), அவரது மகன் ர.திலக்ஷன் (வயது 10) ஆகிய இருவரும் நேற்றுமுன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். கத்தியால் வெட்டியவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். (122)

## சின்னஞ் சிறு செய்திகள்

### புதிய நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சிவசக்தி சனசமூக நிலையத்தின் 2004 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவு - கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்த ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவினை மேற்கொள்ளுமாறு, உள்ளூராட்சித் திணைக்களம் அறிவுறுத்தியிருப்பதை அடுத்தே இந்தத் தெரிவு இடம்பெற்றது.

இதில் - தலைவராக அ.அருள் றெஜீவன், செயலாளராக ம.விஜயகாந்தன், பொருளாளராக வ.திலீப்குமார், விளையாட்டுச் செயற்பாட்டாளராக கு.நிர்மல் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

### மலசலகூடம் அமைப்பு

(சுதுமலை)

இந்து சமய விவகார கலாசார அமைச்சினால் - சங்கானைப் பகுதியில் 25 மலசலகூடங்கள் கடந்த வாரம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு, உரியவர்களிடம் கையளிக்கப்பட்டது.

சங்கானை நிச்சாமம் கிராமத்தில் வறுமைக் கோட்டிற்குட்பட்ட 25 குடும்பங்களுக்கே, 25 மலசலகூடங்கள் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இந்து சமய விவகார கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் கலந்துகொண்டு உரியவர்களிடம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது. (91)

### 'தாமோதரன்' சஞ்சிகை வெளியிடப்பட்டது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் வருடாந்தம் வெளியிடப்படும்-தாமோதரன் சஞ்சிகை - கடந்த வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். சபா.ஜெயராசா சஞ்சிகையை வெளியிட்டு வைத்தார். கல்லூரி முதல்வர் எஸ்.கைலநாதன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நூற்றாண்டையொட்டி இந்த முறை சிறப்புப் பிரதியாக இது வெளியிடப்பட்டது.

இந்தச் சஞ்சிகை இந்தப் பாடசாலையின் ஸ்தாபகர்தினத்தில் அவருடைய பெயரைத் தாங்கி வருடாந்தம் வெளியிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (25)

# காசநோய் தொற்றுக்குள்ளானோரின் தொகை யாழ்ப்பாணத்தில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

காசநோய்க்குரிய வைத்திய சிகிச்சையை சிறந்தமுறையில் வழங்குவதற்கு ஏற்ற வைத்தியசாலை வசதிகள் காணப்படாமையினால், மாவட்டத்தில் காசநோய் தொற்றுக்கு உள்ளானோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு மாத்திரம் 220 பேர் காசநோய்த் தாக்கத்திற்கு உள்ளாகினர். சகல வசதிகள் கொண்ட மயிலிட்டி காசநோய் வைத்தியசாலை கடந்த 18 வருடங்களாக இராணுவ ஆக்கிரமிப்பிற்கு உள்ளாகி, இயங்காமல் உள்ளது.

இதன் காரணமாகவே யாழ். மாவட்டத்தில் இந்த நோய்க்கு ஆளானோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகச் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர். (122)

# லண்டன் பொறியியல்தரப் பயிற்சிநெறி யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

லண்டன் பொறியியல்தரச் சான்றிதழான 'சிற்றி அன்கில்ஸ்' பயிற்சிநெறி யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் ஆரம்பிக்கப்படவுள்ளதால், விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்தியாக்கி, தகமையுடையோர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிப்போர் - தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் - இயந்திரவியல், பொறியியல்தர கற்கைநெறி ஒன்றைப் பூர்த்தி செய்வதற்கு தகைமைச்சான்றிதழ் பெற்றவராக இருத்தல்வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விண்ணப்படிவத்தினை நாளை மறுதினம் வியாழக்கிழமை முதல் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் பெற்றுக்கொள்ளமுடியும் எனவும், அதற்கான விண்ணப்பமுடிவுத் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் என்.யோகராஜன் தெரிவித்தார். (ப)

# யாழ்.திறந்த பல்கலைக் கழகத்திற்கு மூன்று கோடி ரூபா செலவில் கட்டடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.திறந்த பல்கலைக்கழகத்திற்கு மூன்று கோடி ரூபா செலவில் புதிய கட்டடமொன்று அமைக்கப்படவிருக்கிறது.

கடந்த மாதம் 28 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சின் விசேட கலந்துரையாடலிலேயே, இந்த உடனபாடு எட்டப்பட்டது.

யாழ்.திறந்த பல்கலைக்கழகத்தில் போதிய இடவசதி இல்லாதிருப்பதால், புதிய கட்டடம் கட்டுவதற்கு முடியாமல்போகும்நிலை தோன்றியுள்ளது. இதனால், புதிய கட்டடம் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட சுமார் மூன்று கோடி ரூபா வரையிலான நிதி, திரும்பிச் செல்லும்நிலை உருவாகியுள்ளது.

இதனாலேயே, இந்த நிதி உதவியைப் பெற்றுக்கொள்வதுடன், யாழ். திறந்த பல்கலைக்கழகத்திற்கான புதிய கட்டடத்தினை அமைப்பதற்காகவும் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியுடன் ஓர் உடன்பாடு எட்டப்பட்டது.

இதன்படி, யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்குச் சொந்தமான காணியில், இந்தக் கட்டடத்தினை அமைபபதெனவும், அந்தக்கட்டடத்தினை யாழ். தொழில்நுட்பக் கல்லூரியும், திறந்த பல்கலைக்கழகமும் இணைந்து பயன்படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த உடன்பாட்டினை மூன்றாம்நிலைக் கல்வி அமைச்சின் செயலாளர் சமன் எதிரிவீர மற்றும் அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.அபயவர்த்தன, இலங்கைத் திறந்த பல்கலைக்கழகங்களின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜே.லியனகம மற்றும் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் எஸ். யோகராஜா ஆகியோர் கைச்சாத்திட்டதாகத் தெரியவருகின்றது. (ப)

# பட்டாசு கொளுத்தி மக்கள் ஆரவாரம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க - நாடாளுமன்றத்தைக் கலைத்ததை வரவேற்று, கிராமங்களில் பட்டாசு கொளுத்தி மகிழ்ச்சி ஆரவாரம் செய்யப்பட்டது. சனிக்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட அறிவிப்பு வெளியானவுடன், பொ.ஐ.மு. ஆதரவாளர்கள் பட்டாசு கொளுத்தி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

பதுளை, பண்டாரவளை, அப்புத்தளை, மத்துகம, இரத்தினபுரி, பலாங்கொடை, கேகாலை அகிய பகுதிகளிலுள்ள கிராமப்பகுதிகளிலேயே இவ்வாறான ஆரவாரம் இடம்பெற்றதுடன், நேற்றுமுன்தினம் அநேகமான பகுதிகள் நீலநிறக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு காட்சியளித்தன.

# சட்டவிரோத கசிப்பு உற்பத்தியாளருக்கு ஆறுமாதகாலச் சிறைத் தண்டனை

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமானமுறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த பெண்ணுக்கு - யாழ்.மாவட்ட நீதிமன்றினால் ஒத்திவைக்கப்பட்ட 6 மாதகால சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

ஊரெழு கிழக்கு, ஊரெழுவைச் சேர்ந்த பெண்ணொருவருக்கே இந்தத் தண்டனை வழங்கப்பட்டது.

இரண்டு வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை வழங்கப்பட்டபோதிலும், இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டால், மேலதிக தண்டனை வழங்கப்படுவதுடன், கூடுதல் தண்டனைக்கு ஆளாக்கப்படுவார் எனவும் எச்சரிக்கை செய்யப்பட்டது.

இந்தத் தண்டனையை மாவட்ட மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரம் வழங்கினார். (ப)

### போட்டோ பிரதி இயந்திரம் அன்பளிப்பு

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்கு வெளிநாட்டில் வசிக்கும் இந்த பாடசாலையின் பழைய மாணவனான ஜெயக்குமாரால் - போட்டோ பிரதிசெய்யும் இயந்திரமொன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இதனை பாடசாலையில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியன்று பழைய மாணவர் சங்கத்தினரால் - பாடசாலை அதிபர் எஸ். சேதுராஜாவிடம் வழங்கப்பட்டது. (12)

## நாடகமும் அரங்கியலும்

**ப.தர்மா**

# மட்டக்களப்பு நாடக மரபு



இலங்கை நாடகமரபில் மிகமுக்கியமான நாடகமரபாக, மட்டக்களப்பு நாடகமரபு வேரூன்றியுள்ளது. ஏனெனில், ஏனைய நாடக வகைகள்போல, இதனது பழைய வடிவத்திலிருந்து அதிகளவு மாற்றத்தினைக் கொண்டிருக்காது. இன்றும் பல இடங்களில் ஆடப்பட்டு வருவதைக் காணலாம்.

இதற்குக் காரணம் - மட்டக்களப்பு நகரமாக்கப்படாமையும், பண்பாட்டுக் கலப்பாக்கப்படாமையும் ஆகும். எனவேதான், மட்டக்களப்பின் கூத்து மரபையே இலங்கையின் கூத்து மரபாகக்கொள்ளும் இயல்பு உண்டு.

மட்டக்களப்புக் கூத்துமரபை ஆராய்வதன் முன், அந்தக் கூத்துமரபைக் கொண்ட சமூக அமைப்பை விளங்கவேண்டியது அவசியமாகும. அதாவது, மட்டக்களப்பின் சமூக அமைப்பானது, நிலமானிய சமூக அமைப்பாகும். மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் உள்ளது. அத்துடன், குழுவாழ்வின் எச்சங்களாக விழாக்கள், சடங்குகள் என்பன காணப்படுகின்றன. இங்குள்ள மக்கள் இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து குடியேறியவர்களாவர்.

இங்கு ஆட்சியைப் பொறுத்தமட்டில், ஆரம்பத்தில் உறுகுணை இரட்டையிலிருந்தும், பின்னர் தமிழ் அரசின்கீழும், அதன்பின்னர் கண்டிராச்சியத்தின் கீழும் மட்டக்களப்பு இருந்திருக்கின்றது.

சமூக அமைப்பின் சாதிமுறை முக்கியமானது வெள்ளாளர், முக்குவர் போன்றோர் உயர் குடியினராகவும், அதிக நிலங்களின் சொந்தக்காரராகவும் உள்ளனர். அடுத்து காணப்படுபவர் சீர்வாதக்காரர், கரையார் ஆகியோர் உள்ளனர். சாதிமுறை காரணமாக ஊழியமுறை நிர்ணயிக்கப்படுகிறது. உயர்சாதியினருக்கு ஊழியம் செய்வோராக இன்றும் சில சாதி மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இவர்கள் உயர்சாதியினரின் சடங்குமுறையில் முக்கிய இடத்தை வகிககின்றனர்.

இதனைத் தொடர்ந்து வந்த ஆங்கிலேயரின் வருகையும், பொருளாதார அகச்சிதைவுகளும் இந்தச் சமூக அமைப்பில் ஓரளவு மாற்றத்தை ஏற்படுத்தித் தளர்த்தி இருக்கின்றன.

### மட்டக்களப்பின் கூத்துவகை

மட்டக்களப்பின் கூத்துவகையை ஆராய்ந்தோரில், பெரும்பாலானோர் அங்கு ஆடப்படும் கூத்துக்களை - வடமோடி, தென்மோடி என்ற பிரிவிற்குள் அடக்கிவிடுகின்றனர்.

ஆனால், அதுபற்றி விரிவாக ஆராய்ந்த சி.மௌனகுரு - தென்மோடி, வடமோடி நாடகங்கள், மட்டக்களப்புக் கூத்து வகையுடன் பிறகாலத்தில் சேர்ந்துகொண்டனவே என்றும், அவற்றின்முன் மகிடிக்கூத்து, பறைமேளக் கூத்து, வசந்தன் கூத்து என்பன நடைமுறையில் இருந்தன என்றும் கூறினார்.

### மகிடிக்கூத்து

இது இடத்துக்கிடம் அதன் உருவ அமைப்பிலும், ஆடப்படும் முறையிலும், அரங்க அமைப்பிலும் வேறுபட்டுள்ளது. எனினும், ஒரு குழுவை இன்னொரு குழு- தன் மந்திர தந்திரங்களால் வெற்றிகொண்ட கதைதான் இதன் பிரதான உள்ளடக்கமாகும். இந்தக் கூத்தை ஆடுவோர் - வேடன், வேடுவிச்சி, குறவன், குறத்தி, மந்திரங்களால் வல்ல காமாட்சி, மீனாட்சி போன்ற மலையாளப் பெண்கள், சுடலை வைரவர், காம்ப வாண்டி போன்ற தெய்வங்கள் - மகுடிக்கூத்தின் பிரதான பாத்திரங்களாகும்.

மகுடிக்கூத்தின் அரங்கு வெறும் தரையாகும். மூன்று வகையான மகுடிக்கூத்துக்கள் மட்டக்களப்புப் பகுதியில் ஆடப்படுகின்றன.

அவற்றில் இரண்டு வகைக்கு எழுத்துப் பிரதியில்லை. அனுபவம் பெற்ற மகுடிக்கூத்து ஆடிய முதியோர் - வாய்மொழியாகவே இவை பேணப்படுகின்றன.

மூன்றாவது வகைக்கு வரிவடிவம் உண்டு. முந்திய மகுடிக்கூத்துக்களின் அரங்க அமைப்பைவிட, இது சற்று வித்தியாசமானது. இந்தக் கூத்திற்கென தாளக்கட்டும், ஆட்ட முறைகளும் உணடு. இந்தக் கூத்து முடிய, கள்ளுண்டு வெறியாட்டு ஆற்றுவதும் உண்டு. அதனால், இது வெறிக் கூத்து எனவும் அழைக்கப்படும்.

### பறைமேளக்கூத்து

பறைமேளக்கூத்தானது, பறையரிடையே ஆடப்படுகின்றது. வேடம் அணிந்த இருவர்- தம் பறைகளை அடித்து, பல்வேறு தாளங்களுக்கமைய உடலை அசைத்து ஆடுதல் இதுவாகும். கோயில் வெளிவீதியில் நடக்கும் முறையில் - இராசா வரவு, மந்திரி வரவு, கோணங்கி வரவு என வரவுகளை அடித்து ஆடுவர். இந்தக் கூத்தில் கதையில்லை, எனவே, இது நாடகமாக வளரவில்லை.

### வசந்தன் கூத்து

மட்டக்களப்பிலுள்ள சில கிராமங்களின் வழக்கிலுள்ள இன்னொரு கூத்து வசந்தன் கூத்தாகும். இந்தக் கூத்தில் ஆடலும், பாடலும் முக்கியமானவை. ஆனால், இதற்கென பிரதான கதையம்சம் இல்லை. கதையின்மையால், நாடகத்திற்குரிய ஆதங்கம், முரண்பாடு, தீர்மானம் என்பன வசந்தன் கூத்தில் இல்லை. பாடல்களை அதற்குரிய சந்தர்ப்பங்களில் பாடியபடி கோவித்து ஆடுவதே கூத்தின் பிரதான அம்சமாகும்.

வசந்தன் கவித்திரட்டு என்ற நூலில் 62 வகையான வசந்தன்களைக் காணக்கூடியதாகவுள்ளது. இப்பாடல்கள் பல தெய்வ அம்சங்களை வாழ்த்துவனவாகவோ, சில தனிமனிதர்களை வாழ்த்துவனவாகவோ, சில தொழில்சார்ந்தனவாகவோ உள்ளன. இந்த வசந்தன்கூத்து - அறுவடை முடிந்ததும் ஆடப்படும்.

மட்டக்களப்பில் பங்குனியில் அறுவடை முடிந்து, சித்திரையில் வருடப் பிறப்பு கொண்டாடப்படும்போது, இந்தக் கூத்தினை ஆடி மகிழ்வர். இந்தக் கூத்துக்கள் பலவும் இக் காலத்திலேயே ஆடப்படுகின்றன.

மேலும் கண்ணகி வழிபாடு வைகாசி மாதத்தில் பெரு விழாவாக நடைபெறும். எனவே, சித்திரை தொடக்கம் ஆடிவரை இந்தக் கூத்துக்களும் நடைபெறும்.

தொழிலை அடிப்படையாகக் கொண்ட வசந்தன் கூத்தில் வரம்பு அமைத்தல், விதைத்தல், காவல் செய்தல், வேளாண்மை, சூடு வைத்தல் போன்றன கூறப்படுகின்றன.

இது தமிழில் உள்ள பள்ளுவடிவத்தை ஒத்துள்ளது. பள்ளு நாடகத்திலும், விவசாயத்தை தொழிலாக உடைய மக்கள் முக்கியம் பெறுவர். இந்த வசந்தன் பாடல்கள் பலரால் பாடப்பட்டுள்ளன.

வசந்தன் கூத்து - இயல்பு வேலை முடிந்ததும் ஓய்வுநேரங்களில் ஆடப்படும் அல்லது கண்ணகையம்மன் கோயில் சடங்கில் ஆடப்படும். அத்துடன், கொம்பு விளையாட்டு நடந்து கொம்பினை முறித்து, கொம்பினைத் தேரில் ஊர்வலமாகக் கொண்டுசெல்லும்போது, ஆடப்படும் இந்தக் கூத்து - கோயில் வீதியில் அல்லது சந்தியில் ஆடப்படும்.

ஆரம்பத்தில் மக்கள் சுற்றியிருக்க, கோயிலின் முன்னால் ஆடப்பட்டது. பின்னர் வடமோடி, தென்மோடிக் கூத்துக்களுக்கு அமைக்கப்படுவதுபோன்ற வட்டவடிவமான, நிலமட்டத்திலிருந்து உயரமான மேடை அமைத்து ஆடினர்.

கண்ணகையம்மன் சடங்கின்போது, இன்று நிலமட்டத்திலேயே கயிறுகட்டி அலங்கரிக்கப்பட்ட வட்டக்களரியிலேயோ அல்லது அந்தக் கூத்துமேடைபோன்ற மேடையிலோ ஆடப்படும்.

ஆடுவோர் மத்தியில் அண்ணாவியாரும், ஏடு பார்ப்போரும், பக்கப்பாட்டுக்காரரும் நிற்க - இச்சபையோரைச் சுற்றியே வசந்தன் கூத்து ஆடப்படும். வசந்தன் கூத்துப் பாடல்களை அண்ணாவிமாரும், பிற்பாட்டுக்காரரும் பாடுவர்.

மட்டக்களப்பு வரலாற்றுக் காலப்பகுதியில் கூத்து முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது என்று கூறுவதில் சந்தேகமில்லை. இதனால், இன்று ஈழத்துத் தமிழ்நாடக உலகில் மட்டக்களப்புக் கூத்து முக்கிய இடம்பெறுவதைக் காணமுடிகிறது. ❑

## புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் - பகுதி V

**- சிவா**

# தொடரும் அகதி வாழ்வின் அவலங்கள்...



(நேற்றைய தொடர்ச்சி...)

இரண்டாவது வேலைக்கு, அதிகாரி வேலைத்தளத்தில் இருக்கமாட்டார். மாலை 6 இலிருந்து இரவு 9 மணிவரை வேலை என்றால், ஒரு நிமிடங்கூட ஓய்வெடுக்க முடியாதளவுக்கு அவர் வேலையைத் தனது அலுவலகத்தில் இருந்தவாறே பங்கிட்டுக் கொடுத்துவிடுவார்.

அதாவது, இந்த 3 மணிநேரத்துக்குள் குறிப்பிட்ட அந்த வேலையைச் செய்து முடித்துவிடவேண்டும். சம்பவம் நடந்த 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் திகதி மாலைப் பொழுதிலேயே, பாலச்சந்திரன் மிகவும் சோர்ந்துபோய்க் காணப்பட்டான். மாலை வேலைக்கு வரும்போதே, அவன் மிகவும் களைத்துப்போயிருந்ததாக, அவனுடன் வேலை செய்த நண்பர்கள் தெரிவித்தனர்.

இரவு 9 மணிக்கு வேலை முடிக்கும் நேரத்தில், 12 ஆவது மாடியின் மின் ஏணியில் (லிப்டில்) 240 கிலோ எடையுள்ள குப்பைக் கழிவுடன் பாலச்சந்திரன் உள் நுழைந்தபோது, அவனுக்கு மாரடைப்பு வந்திருக்கிறது.

சாதாரணமாக அந்த மின் ஏணியில் அவசர உதவிகோரும் அழைப்புமணி இருக்கும். ஏனோ அவன் அந்த அழைப்பு மணியை அழுத்தவில்லை. அந்த மின் ஏணிக்கான பதிவேடுகளில், அந்தநேரத்தில் அப்படி அழைபபு வந்ததற்கான பதிவுகள் எதுவும் இருக்கவில்லை.

அவனுடன் வேலைசெய்தவர்கள்கூட வீட்டுக்குச் செல்லும் அவசரத்தில், அவனைக் கவனிக்காமல் சென்றுவிட்டனர். அந்த நிறுவனத்தின் இரவுக் காவலாளிகள்கூட, கட்டடத்தின் உட்பகுதிகளைத் தான் சுற்றிப் பார்த்தார்களேதவிர, அந்த மின் ஏணியைப் பார்க்கவில்லை.

அது சாமான்களை ஏற்றி இறக்குவதற்கு மட்டும் பயன்பட்டதால், ஆட்கள் ஏறி இறங்கும் லிப்டை மட்டும் பார்த்துவிட்டு, அவர்கள் சென்றுவிட்டனர்.

அதிகாலை 1 மணிக்குக் கடைசி தொடருந்து (மெட்திரோ) சேவை முடிந்த பின்பும், அவன் அறைக்கு வராததைக் கண்டு, அவனது நண்பர்கள் கலவரமடைந்தனர்.

நெக்டாம்புஸ் (ஆந்தை பேருந்து) எனப்படும் இரவுநேரப் பேருந்தில் வருவான் என்றும் அவர்கள் எதிர்பார்த்தனர்.

அதிகாலை 4 மணியாகியும் அவன் வராததைக்கண்டு - தெரிந்தவர்கள், நண்பர்களுக்கெல்லாம் தொலைபேசி எடுத்து விசாரித்தனர்.

அவன் வேலைசெய்த நிறுவனத்துக்கும் தொலைபேசி எடுத்துப் பார்த்தனர். அவன் அங்கிருந்து 9 மணிக்குச் சென்றுவிட்டதாகவே அங்கிருந்த காவலாளிகள் தெரிவித்தனர்.

கடைசியில் அவனது நண்பர்கள் - தங்கள் பகுதிக் காவல்துறையில் சென்று, அவனைக் காணவில்லை என்று முறையிட்டனர்.

கறுப்பின அல்லது அரபு இன வன்முறைக் கும்பல்களால் அவனுக்கு ஏதாவது நடந்திருக்கலாம் என்று அவர்கள் பயந்தனர்.

இவ்வாறு அவனைக் காணவில்லை என்ற பரபரப்பு - அவனது நண்பர்கள் மத்தியிலிருந்தபோது, அவன் வேலைசெய்த அந்த இலத்திரனியல் நிறுவனத்தின் காலைநேர வேலைப் பிரிவினர் - 10 ஆவது மாடிக்குப் பொருட்களை ஏற்றுவதற்காக அந்த மின் ஏணியை இயக்கியபோது, அதற்குள் உயிரற்ற நிலையில் பாலச்சந்திரனின் உடல் கண்டுபிடிக்கப்பட்டது.

இரவுக் காவலாளிகள் வேலைநீக்கம் செய்யப்பட்டனர். முதலில் இது ஒரு கொலையாக இருக்குமா என்ற சந்தேகம் இருந்தது. ஆனால், காவல்துறை விசாரணை மற்றும் மருத்துவ பரிசோதனைகள் மேற்கொண்டதில்- மாரடைப்பின்மூலம் அவன் மரணமடைந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர், அவனது நண்பர்கள் - **CGT** எனப்படும் தொழிற்சங்கத்தின்மூலம் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, அவனது உடல் இங்கே அனுப்பி வைக்கப்பட்டதுடன், அவனுக்குரிய இழப்பீட்டுத் தொகையும் பெற்றுக்கொடுக்கப்பட்டது.

பாலச்சந்திரனின் நண்பன் ஒருவனே அவனது அக்காவைத் திருமணம் செய்து கொண்டதுடன், அவனது தம்பிகளையும் ஐரோப்பாவுக்கு அழைத்துக்கொண்டதாகவும், 1996 ஆம் ஆண்டு இடப்பெயர்வின்போது, அவனது தாய் இறந்துவிட்டதாகவும் அறிய முடிந்தது.

◆

1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25 ஆம் திகதி பாரிஸ் நகரின் 12 ஆவது நிர்வாகப் பிரிவான **Pote de la chaplle** (போட் - து லா - சப்பல்) மெத்திரோ (நிலத்தின்கீழ் செல்லும் தொடருந்து) நிலையத்தின் எதிரிலுள்ள பேருந்துத் தரிப்பிடத்தில், 30 வயது இளம் பெண் ஒருவர் பேருந்து சக்கரத்தில் அகப்பட்டு, நசியுண்டு உயிரிழந்தார்.

அதிகாலை 5.30 மணிக்கு நடந்த இந்தச் சம்பவம் - பேருந்துப் பயணிகளின் பாதுகாப்பு தொடர்பான கேள்வியை, பிரான்ஸிலுள்ள ஊடகங்கள் எழுப்பக் காரணமாக இருந்தது.

இறந்த இளம்பெண், யாழ்ப்பாணம் - கொட்டடியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான சுமதி (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்பவராவார்.

இந்தப் பெண் மெத்திரோ நிலையத்திலிருந்து வெளியே வந்து - புறப்படத் தயாராக இருந்த பேருந்தில் ஏறமுற்பட்டபோது, பேருந்தின் கதவு சடுதியாகச் சாத்தப்பட்டதால், நிலைகுலைந்து தடுமாறி விழுந்து - பேருந்தின் பின் சக்கரங்களுக்குள் சிக்கி, நசியுண்டு உயிரிழந்ததாக காவல்துறை தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

இந்தப் பெண்ணின் மரணத்தைத் தொடர்நது, அவரைப் பற்றி நான் விசாரித்து அறிந்த தகவல்கள் - மனதை உருக்குவதாக இருந்தது.

சுமதி மிகவும் வறுமைக்கோட்டில் வாழ்ந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர். அப்பா நீரிழிவு நோய்காரர். அம்மா வறுமையால்வாடி உருக்குலைந்து போனவர். 24 வயதில் ஒரு தம்பியும், 20 வயதில் ஒரு தங்கையும் இருந்தனர்.

தம்பி சரியான ஊதாரியாகவும், சண்டித்தனக்காரனாகவும் இருந்தான். சுமதியின் கணவனும் சரியான குடிகாரனாக இருந்தான்.

உணவுவிடுதி ஒன்றில் உதவி சமையற்காரனாக வேலை பார்த்த அவன் - வீட்டுக்கு வரும்போது, நல்ல தண்ணியிலேயே வருவான். அடி, உதை, சண்டை என்பது சுமதியைப் பொறுத்தவரை தினசரி வாழ்க்கை நிகழ்வாக இருந்தது.

கணவனுக்கு 6 ஆயிரம் பிராங் சம்பளம். அதில் 3000 பிராங் அவனுடைய செலவுக்குப் போய்விடும். வீட்டுச் செலவுக்காக அவன் கொடுப்பது 3000 பிராங் மட்டும்தான்.

10 வயதும், 8 வயதும் நிரம்பிய 2 பிள்ளைகளுடன் - வீட்டு வாடகை, மின்சாரம், தண்ணீர், தொலைபேசிக் கட்டணம், போக்குவரத்துச் சீட்டுக் கட்டணம் என்று குடும்பச் செலவைச் சமாளிப்பது சுமதிக்குப் பெரும்பாடாக இருந்தது.

இந்த நிலையில், வறுமையில் வாடும் பெற்றோருக்கு எந்தவித உதவியும் செய்ய முடியவில்லையே என்ற கவலை வேறு சுமதியை வாட்டிக்கொண்டிருந்தது.

**A/L** வரை படித்துவிட்டு, வேலை எதுவும் செய்யாமல், ஊதாரியாக ஊரைச் சுற்றித்திரிந்த தம்பி வேறு அடிக்கடி பணம்கேட்டுப் பெற்றோரைத் தொல்லைப்படுத்தி வந்ததாக, அப்பா ஊரிலிருந்து எழுதும் கடிதங்கள் - சுமதிக்குப் பெரும் கவலையைக் கொடுத்தன.

தனது தம்பியை வெளிநாட்டுக்குச் கூப்பிட்டுவிட்டால், அவனைத் தன்னுடன் வைததுத் திருத்திவிடலாம் என்றும், அவன்மூலம் தனது பெற்றோருக்கும், தங்கைக்கும் நல்ல எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்கலாம் என்றும் அவள் நினைத்தாள். இதற்குத் தன்னுடைய கணவனின் ஒத்துழைப்புக் கிடைக்காது என்பதும் அவளுக்குத் தெரியும்.

அதனால், தனக்குத் தெரிந்த தோழிகளின் தயவில் ஒரு வேலையைச் செய்ய அவள் தீர்மானித்தாள்.

பல இடங்களில் அவள் மேற்கொண்ட முயற்சியின் பயனாக, காலைநேரத்தில் ஒரு அலுவலகத்தைக் கூட்டித்துடைக்கும் வேலையும், மாலை நேரத்தில் - தொடருந்தைச் சுத்தப்படுத்தும் வேலையும் கிடைத்தது.

காலை வேலை - 6 மணியிலிருந்து 8 மணிவரை. மாலை வேலை - பிற்பகல் 2 மணியிலிருந்து 7 மணிவரை. சுமதியின் கணவன் முதலில் இதற்குச் சம்மதிக்கவில்லை. ஆனாலும், அவள் விடாப்பிடியாக நின்று சண்டைபிடித்து இந்த வேலைக்குச் செல்லத் தீர்மானித்தாள்.

ஆனால், பிள்ளைகளை யார் பாடசாலைக்கு அழைத்துச் செல்வது பின்னர் கூட்டி வருவது என்பது பெரும் பிரச்சினையாக இருந்தது. காலையில் அவர்களைப் பாடசாலையில் கொண்டுபோய் விடுவதற்கு, அவளது கணவன் சம்மதித்தான்.

ஆனால், அவள் வேலைக்குப் போவதற்கு முன்னர் பிள்ளைகளுக்கான சாப்பாட்டைத் தயார்செய்து வைத்துவிட்டுத்தான் போக வேண்டும் என்றும் அவன் நிபந்தனை விதித்திருந்தான். மாலையில் பாடசாலை முடிந்ததும் - பிள்ளைகளை வீட்டுக்குக் கூட்டிவரும் பொறுப்பை, சுமதியின் அயல்வீட்டுத் தோழி (தமிழ்பெண்தான்) எடுத்துக்கொண்டாள்.

இந்தப் பின்னணியில் - காலை 4 மணிக்கு எழுந்து பிள்ளைகளுக்கும், கணவனுக்குமான காலைச்சாப்பாட்டைத் தயாரித்து வைத்துவிட்டு, 5 மணிக்கு வீட்டைவிட்டு இறங்கி 5.20 மெத்திரே பிடித்து, போத் து லா சம்பலுக்குச் சென்று, அங்கு பேருந்து பிடிப்பது அவளது வழக்கமாக இருந்தது. (தொடரும்....)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*வாய்மை எனப்படுவது யாது எனின் யாது ஒன்றும்
தீமை இல்லாத சொலல்*

திருக்குறள்.

## நமது நோக்கு

## பொய்யில் மையம் கொள்ளும் பிரசார யுத்த நடவடிக்கைகள்

தேர்தல் என்று வந்துவிட்டாலே அரசியல் வாதிகளின் நகைச்சுவை உணர்வு பீறிட்டுக்கிளம்பத் தொடங்கிவிடும்.

அவர்கள் மிகவும் சீரியலாக உண்மையான தீவிரத் தன்மையுடன் - பேசினாலும் கூட, அந்தப் பேச்சினூடே அவர்களின் கோமாளித்தனத்தையும் இனம் கண்டுவிட முடியும்.

எதைப் பேசுவது என்பதைவிடவும் ஏதாவது பேசவேண்டும் என்பதே... அதுவும் எதிராளியைத் தாக்கி எப்படியாவது பேசிவிடவேண்டும் என்பதே அவர்களின் இலக்காக இருப்பதால், தங்களுக்குள்ள ஜனநாயக உரிமைகளை சந்து எல்லை கடந்தே பிரயோகிப்பது அவர்களின் இயல்பாகவும் உள்ளது.

தான் பேசுவது பொய்யானாலும், அதை மெய்யெனத் தொனிக்கவைக்கும் வல்லமைதான் இலங்கையின் அரசியல்வாதிகளின் தனித்துவத் தன்மையாகவும் உள்ளது. அவர்களுக்கு மக்களின் மறதிமேல் அபார நம்பிக்கையுண்டு. தாம் சொல்வதை நம்பி உணர்ச்சி பூர்வமானநிலையில் கைதட்டிப் பாராட்டி தமது வாக்குகளை தமக்கு அளிப்பார்கள் என்ற நம்பிக்கையும் அபரிமிதமாகவே அவர்களுக்குண்டு.

இத்தகைய அரசியல்வாதிகளின் பலமும், பொதுமக்களின் 'இளிச்ச வாய்த்தனமான' பலவீனமே , இலங்கையை இன்றைய குழப்பநிலைக்கு இட்டுச் சென்றுள்ளது என்பதில் ஐயமில்லை.

காலம்காலமாக, அதாவது கடந்த அரைநூற்றாண்டிற்கும் அதிக காலமாக, இலங்கையின் அதிகாரவர்க்க - தென்பகுதி அரசியல்வாதிகளின் இனவாத கொள்கைகளால் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் அவலங்களே இலங்கையின் அரசியல் தத்துவமாகிவிட்ட நிலையில்', அதன் வரலாறானது இரத்தவரிகளால் எழுதப்பட நேர்ந்தது துயரமிக்கதொன்றேயாகும். தன்நெஞ்சறியப் பொய்யுரைக்கும 'கோயபல்ஸ்' தனப்பிரசங்கங்களின் கங்குகரையற்ற பிரவாகமானது - தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினையைப் பயங்கரவாதப் பிரச்சினையாக - பூதாகாரமாக்கிக் காட்டுவதில் பெரும்பங்கு வகிப்பதை எவரும் ஒப்புக்கொள்ளவே செய்வர்.

போர் இந்தநாட்டில் தந்துவிட்டுச் சென்றுள்ள அவலங்களின் வடுக்கள் உணர்த்துவதெல்லாம் - பொய்யுரைக்கும் பேரினவாத அரசியல் தலைமைகளை விட்டுச் சென்றுள்ள வரலாற்றுத் தவறுகளேயாகும். இதனைத் தவறுகள் என்று கூறுவதை விடவும், திட்டமிட்டு செய்யப்பட்ட சதிகள் என்று கூறுவதுதான் மிகப்பொருத்தமானதாகும். பொய்யில்லாத அரசியலே இல்லை...! பொய், ஒரு இராஜதந்திரம் அனுகுமுறையென்றும் கூறுவர். ஆனால், பொய்யை மட்டுமே அரசியலாக்கும் அனுகுமுறைத்திறன் தென்னிலங்கை அரசியல்வாதிகளின் பாரம்பரியம் என்றுதான் கூறவேண்டும்.

தேர்தல் என்பது பிரசார யுத்தத்தால் வெல்லப்படும் ஒன்றேயாகும். பிரசாரம் என்பது உளவியல் யுத்தத்தின் ஒரு கூறு என்றுதான் அர்த்தப்படும். இந்த யுத்தத்தில் வெற்றி பெறுபவர் எவரோ அவரே... எந்தக் கட்சியோ, அந்தக் கட்சியே தேர்தலிலும் வெற்றியைப் பெறமுடியும். பிரசாரத்தின் தளமூலம் வெகுஜனத் தொடர்பு ஊடகங்களேயாகும். அதனால்தான் ஜனாதிபதி சந்திரிகா தொலைநோக்குடன் - எதிர்கொள்ள வேண்டி வரக்கூடிய தேர்தலை மனதில் கொண்டு - தொடர்பு ஊடக அமைச்சுத்துறையை தன்வசம் ஆக்கிக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்போது நாடாளுமன்றத்தைக் கலைத்ததும், ஊடகத்துறைக்கான அமைச்சராக அவரது விசுவாசியான லக்ஸ்மன் கதிர்காமரை நியமித்ததன் மூலம், தனது உள்நோக்கத்தை வெளிப்படுத்திவிட்டார் என்றே கூறவேண்டும்.

அரச சார்பு ஊடகங்கள் ஜனாதிபதியின் பக்கம் சார்ந்து, குரல்கொடுக்கும் 'அரச கட்டளை'யை நிறைவேற்றத் தொடங்கிவிட்டன.

இனி அவற்றின் பிரசாரப்பணி எப்படி இருக்கப் போகிறது என்பதற்கு ஒரு உதாரணம் நேற்றுமுன்தினம் அரச வானொலி தெரிவித்த செய்தியாகும்.

யாழ்.ப.நோ.கூ.சங்கத்தின் முன்னாள் தலைவர் சி.வீ.கே.சிவாஞானத்தை விடுதலைப் புலிகள் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர் என்பதேயாகும்.

இது கதிர்காமரின் 'கோயபல்ஸ' பணி ஆரம்பமாகி விட்டது என்பதையே எடுத்துக்காட்டுகிறது.


மற்றொரு சிங்கள இணையத்தளம் - விடுதலைப் புலிகள் குறுந்தூர ஏவுகணையைப் பரிசீலித்துப் பார்த்தார்கள் எனச் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தப் பிரசாரம், விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஒரு நடவடிக்கை என்பது மட்டுமல்ல சமாதானத்தை அவமதிக்கும், ஒரு நடவடிக்கையாகும். இதனை சிங்கள மக்களும், சர்வதேச சமூகமும் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

சமாதான முயற்சிகளின் பின் 'காற்றுப்போன' நிலையில் இருக்கும் கதிர்காமருக்கு, மீண்டும் காற்றேற்றிப் பறக்கவிட்டிருக்கிறார் என்று மக்கள் மத்தியில் பேச்சடிபடத் தொடங்கிவிட்டது.

"உருட்டும் பிரட்டும், சிரட்டையும் கையும்" என்ற பழமொழியை இந்தப் பொய்ப் பிரசாரங்கள் புரியாதிருப்பது பரிதாபத்திறகுரிய விடயமே...!

## நாடும் நடப்பும்




# மாற்று அரசியல் கூட்டணி அமைக்க இப்போது அவசியம் எழுந்துள்ளது!

## ஜனநாயக இடதுசாரி முன்னணி கூறுகின்றது

(கொழும்பு)

மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடிய மாற்று அரசியல் கூட்டணி ஒன்றின் அவசியம் தற்போது எழுந்திருப்பதாக - ஜனநாயக இடதுசாரி முன்னணி தெரிவித்துள்ளது.

லங்கா சமசமாஜக்கட்சியும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் முன்வந்து - இதற்கான அழைப்பினை விடுக்கவேண்டுமென, ஜனநாயக இடதுசாரி முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கான அவசியத்தை வலியுறுத்தி, ஜனநாயக இடதுசாரி முன்னணியின் நிறைவேற்றுக்குழு - லங்கா சமசமாஜக்கட்சிக்கும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்கும் கடிதங்களை அனுப்பிவைத்திருக்கிறது.

புதிய கூட்டமைப்பை ஏற்றுக்கொள்ளாத பொதுஜன ஐக்கிய முன்னணியில் உள்ள கட்சிகளையும், ஏனைய கட்சி அமைப்புக்களையும், அரசாங்கம் குறித்து அதிருப்தி அடைந்துள்ள நபர்களையும் ஒன்றிணைக்கும் நடவடிக்கையில் இந்த இரு கட்சிகளும் ஈடுபடவேண்டுமென, ஜனநாயக இடதுசாரி முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை, சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் ஒன்றிணைந்து மேற்கொண்டுள்ள கூட்டமைப்பு யுத்தத்திற்கு சார்பான கொள்கைகளை கொண்டிருப்பதாக ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் பெறும் நோக்கத்துடனேயே இந்த அவசர தேர்தல் நடைபெறுவதாகவும் குறிப்பிட்ட அவர்,

சமாதான நடவடிக்கைகளை முன்நோக்கிக் கொண்டு செல்வதற்கு ஜனாதிபதி - பிரதமருக்கிடையில் இணக்கப்பாடு ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகரித்திருந்த வேளையிலேயே, ஜனாதிபதி சந்திரிகா தமது பொறுப்புக்களில் இருந்து தப்பித்துக் கொண்டது இதன் மூலம் தெளிவாகத் தெரிகின்றது என்றும் அவர் மேலும் கூறினார்.

# 3500 பொலிஸாருக்கு விரைவில் பதவியுயர்வு!

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

பொலிஸ் சேவையிலுள்ள 3500 பேருக்கு பதவியுயர்வுகள் வழங்கப்படவிருப்பதாக, பொலிஸ்மா அதிபர் இந்திர டீ சில்வா தெரிவித்தார்.

மத்திய மாகாண கிழக்குப் பகுதி பொலிஸ் பிரிவுகளை சேர்ந்த பொலிஸ் அதிகாரிகளை நுவரெலிய மாவட்டச் செயலகத்தில் பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வா நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலத்தில் பொலிஸ் திணைக்களத்தில் பதவியுயர்வுகள் தாமதமாகவே மேற்கொள்ளப்பட்டன.

ஆனால், விரைவில் இந்தநிலை மாற்றப்படவுள்ளது. 3500 பொலிஸாருக்கு விரைவில் பதவியுயர்வுகள் வழங்கப்படவுள்ளன. 1700 பொலிஸ் கொன்ஸ்டபிள்கள் - சார்ஜன்ட்களாகவும், 1200 சார்ஜன்ட்கள் - சப் இன்ஸ்பெக்டர்களாகவும் பதவியுயர்த்தப்பட உள்ளனர். 600 இன்ஸ்பெக்டர்கள் தர அதிகாரிகள் பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர்களாகவும் பதவியுயர்வு பெறவுள்ளதாக பொலிஸ்மா அதிபர் இந்திர டீ சில்வா மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, 115 பொலிஸ் அதிகாரிகளுக்கான பதவி உயர்வுகள் அங்கீகரிக்கப்பட்டிருப்பதாகப் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. பல்வேறு தரங்களையுடைய இந்த அதிகாரிகளின் பதவி உயர்வுகளை, வழங்க பொலிஸ் சேவை ஆணைக் குழு அங்கீகாரம் வழங்கியிருப்பதாகவும் பொலிஸ் தலைமை யகம் அறிவித்தது.

# புதிய கூட்டணியைத் தோற்கடிக்க வர்த்தக சமூகம் திட்டமிட்டுள்ளது

புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி கூட்டணிக்கு எதிராக வாக்காளர்களைத் திருப்பிவிடுவதற்கு பல்வேறு வர்த்தகப் புள்ளிகளும் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தோதல்களில் இந்தப் புதியகூட்டணி வெற்றிபெறுவதை வர்த்தக சமூகம் விரும்பவில்லை எனவும், இந்தக் கூட்டணியின் பொருளாதாரக் கொள்கையயிட்டு வர்த்தகர்கள் அதிருப்தி கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் எரிந்துகொண்டிருக்கும் பிரச்சினைகளையிட்டு, இந்தக் கூட்டணி எந்தக் கவலையும் கொள்ளவில்லை என்பது இந்தத் தேர்தல் அறிவிப்பின் மூலம் தெளிவாகியிருக்கிறது.

வொஷிங்ரனில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்கு முன்னர், நாடாளுமன்றத்தைக் கலைத்தமை, நாட்டைப் பற்றி எந்த அக்கறையும் இவர்கள் கொண்டிருக்கவில்லை என்றும் வர்த்தகர்கள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர். இந்த அரசியல்நிலை குறித்து ஆராயவும், எதிர்காலத் திட்டங்கள் குறித்து விவாதிக்கவும், வர்த்தக சம்மேளனங்கள் தமது நிர்வாகக் குழுக்கூட்டங்களை நடத்தவிருப்பதாகவும் தெரியவருகிறது.

# நாடாளுமன்றத்தைக் கலைத்தது ஜனநாயக விரோதச் செயலாகும்!

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்து, பொதுத் தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிட்டமை ஜனநாயக விரோத செயல். இவ்வாறு அமைச்சரும் பேராசிரியருமான ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதி தமக்கு நெருங்கிய லக்ஷ்மன் கதிர்காமர், ஜெயரத்ன ஆகிய இருவருக்கும் அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்கு எந்த அதிகாரமும் இல்லை. அத்துடன், நாடாளுமன்றத்தையும் அவர் கலைக்க முடியாது. ஜனாதிபதி இவ்வாறு நடந்தமை 17ஆவது அரசியல் சாசனத்தை மீறும் செயலாகும்.

நாடாளுமன்றத்தினை ஜனாதிபதி கலைத்தமை ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான நடவடிக்கையே. இந்த நடவடிக்கையானது சமாதானம் பாதிப்படைவதுடன் நாட்டினது அபிவிருத்திக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் இணைந்து கொண்ட ஒப்பந்தத்தின் எந்த இடத்திலும் சமாதானம் பற்றிய இணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. இவ்வாறான கூட்டமைப்பு நாட்டிற்குப் பயனுள்ள எந்த ஆட்சியையும் தரமுடியாது.

எதிர்வரும் 17 ஆம் திகதி வொஷிங்டனில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் ஜனாதிபதி தற்போது மேற்கொண்டுள்ள நடவடிக்கையினால் இலங்கைக்கு கிடைக்க வேண்டிய பாரிய நிதியுதவி கிடைக்காமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (01)

# ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் வித்தியாநுபாலன யந்திரசாலை

**யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் நிறுவிய பதிப்பகத்திற்கு இந்த ஆண்டு தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிவாளர் சங்கத்தினர் விருது வழங்கி சிறப்பித்துள்ளனர்.**

**இந்த நிகழ்வு கடந்த மாதம் 9 ஆம் திகதி தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிவாளர் சங்கத்தின் 27 ஆவது சென்னைப் புத்தகக் கண்காட்சியின் தொடர்ச்சி விழாவில் நடைபெற்றது. ஆறுமுக நாவலர் அறக்கட்டளை அறங்காவலர் சிதம்பரம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க மூதூரி இரத்தின சிங்கம் இந்த விருதினைப் பெற்றுக் கொண்டார்.**

**இந்திய அரசின் திட்டக்குழு உறுப்பினர் முனைவர் வேங்கட சுப்பிரமணியன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் எழுத்தாளர் ஜெயசாந்தன் விருதை வழங்கினார் பூபாலசிங்கம் புத்தகசாலையின் அதிபர் ஸ்ரீதர் சிறி இந்த நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.**

**கடந்த மூன்று ஆண்டுகால ஒரு போராட்டத்தை நடத்தி உண்மையை வெளிக் கொணர்ந்ததால் இவ்விருது இந்த ஆண்டு ஆறுமுக நாவலர் அறக்கட்டளைக்கு கிடைத்தது. இந்த விழாவின் போது வழங்கப்பட்ட விருது பாராட்டிதழின் முழு விபரம் பிரசுரமாகின்றது.**

**154** ஆண்டுகளாக இடையறாது தமிழ் நூல்களை வெளியிட்டுவரும் பதிப்பகம்- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலா வித்தியா நுபாலன யந்திரசாலை.

தி.பி.1880 (கி.பி.1849) ஆம் ஆண்டு, சென்னையில் சூடாமணி நிகண்டு - உரையுடன் என்ற நூலை வெளியிட்டுப் பதிப்பு முயற்சியுள் இப்பதிப்பகம் காலடி எடுத்து வைத்தது. இந்தப் பதிப்பகத்தை நிறுவியவர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர்.

தி.பி.1910 (கி.பி.1879) ஆம் ஆண்டு ஆறுமுகநாவலர் மறைந்தார். முப்பது ஆண்டு காலத்தில் அவர் இந்தப் பதிப்பகம் மூலம் 68 நூல்களை வெளியிட்டார்.

அதேகாலப்பகுதியில் தமிழ்நூல் பதிப்பு முயற்சியில் ஈடுபட்ட எவரும் இவ்வளவு தலைப்புகளையோ, இவ்வளவு மறுபதிப்புகளையோ வெளியிடவில்லை.

ஆறுமுகநாவலர் பதிப்பு என்றால்- பிழையற்ற செம்பதிப்பு என்ற தனிமதிப்பு இன்றுவரை இருந்து வருகிறது. அரிய நூல்களைத் தேடித்தேடிப் பதிப்பித்தவர் ஆறுமுகநாவலர்.

பதிப்பாசிரியராக அவரே பணிபுரிந்தார். நூலாசிரியராய் பல நூல்களை அவரே எழுதினார். முதலில் பிற அச்சகங்களில் அச்சிட்டவர், காலப்போக்கில் தன் சொந்த அச்சகத்தை நிறுவினார். தானே விற்பனை நிலையத்தையும் அமைத்தார். எழுத்துப் பதிப்பு, அச்சு வெளியீடு, விற்பனை ஆகிய அனைத்தையும் இப் பதிப்பகத்தின்மூலம் அவர் நிறைவேற்றினார்.

இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளில் அவரின் பதிப்பு முயற்சிகள் தொடர்ந்தன. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வித்தியாநுபாலன யந்திரசாலையே தமிழர் அமைத்த முதலாவது பன்னாட்டுப் பதிப்பகமாகும்.

தான் இல்லாத காலத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வித்தியாநுபாலன யந்திரசாலை தொடர்ந்து நடைபெற ஏற்பாடுகளை செய்து வைத்தார். அவரிற்குப் பின்னரும் அப்பதிப்பகப் பணிகள் யாழ்ப்பாணம், சென்னை ஆகிய இடங்களில் செவ்வனே தொடர்ந்தன. அவர் எழுதிவைத்து பதிப்பிக்காத நூல்களைப் பின் பொறுப்பேற்றோர் பதிப்பித்தனர். அவர் செம்மை செய்து பதிப்பிக்க ஆயத்தம் செய்து வைத்த நூல்களையும் அவர் பின் வந்தோர் பதிப்பித்தனர். அவர் காலத்துப் பதிப்புக்கள் இருப்புக்



குறைந்ததும் அவர் பின் வந்தோர் அந்த நூல்களை மறுபதிப்புச் செய்தனர்.

சைவ வினாவிடை என்ற நூலைத் தமிழகத்திலும், இலங்கையிலும் பல பதிப்பகங்கள் வெளியிட்டபொழுது, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வித்தியா நுபாலன யந்திரசாலையினர் மறுப்புத் தெரிவிக்கவில்லை. தற்காலத்தில் தமிழில் உரை நடையில் எழுதி வெளிவந்த எந்த நூலும், சைவ வினாவிடைபோன்ற பதிப்பளவைப் பெறவில்லை. இதுவரை 250 இற்கும் மேற்பட்ட பதிப்புக்களை அந்த நூல் கண்டுள்ளது.

புவியியல், வரலாறு, அகராதி, மொழியியல், இலக்கியம். சமயம், சிறுவர், இதழியல், மொழிபெயர்ப்பு என எண்ணிறைந்த பரந்த பாடப் பரப்பைக் கொண்ட பதிப்பகமே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் வித்தியாநுபாலன யந்திரசாலை.

சென்னையில் தங்கசாலைத் தெருவிலும், சிதம்பரம் மாலைக்கட்டிடத் தெருவிலும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் வித்தியாநுபாலன யந்திரசாலை இப்பொழுது இயங்கிவருகிறது.

இந்த ஆண்டிலும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் வித்தியாநுபாலன யந்திரசாலையின் பதிப்பு நூல்கள் வெளிவந்துள்ளன. பழைய தலைப்புகளை மறுப்புச் செய்வதுடன், காலத்தின் தேவையை ஒட்டி, புதிய தலைப்புக்களையும் இந்தப் பதிப்பகம் வெளியிட்டு வருகின்றது.

ஆங்கில ஆட்சியில் தமிழ் நூல்கள் அழிந்துவிடக்கூடாது, தமிழர் தம் முன்னோர் அளித்த அருஞ்செல்வங்களைப் பாதுகாக்க வேண்டும், தமிழர் தம் அடையாளங்களைப் பேணவேண்டும், அதற்காகத் தமிழ் நூல்களை வெளியிட வேண்டும் என்ற நல்ல நோக்குடன் தொடங்கிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் வித்தியா நுபாலன யந்திரசாலை, அதே காலத்தில் தொடங்கிய பல பதிப்பகங்கள் கால வெள்ளத்தில் அழிந்துபோயும், 154 ஆண்டுகளாகச் சிறந்த தமிழ் நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டுவருவதைப் பாராட்டி, தென்னிந்தியப் புத்தகப் பதிப்பாளர் மற்றும் விற்பனையாளர் சங்கத்தினராகிய நாம், எமது 27 ஆவது சென்னைப் புத்தகக் கண்காட்சித் தொடக்க விழாவில், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் வித்தியாநுபாலன யந்திரசாலைக்கு, 'நூற்றாண்டு கண்ட தமிழ்ப்பதிப்பகம்' என்ற சிறப்பு விருதை வழங்குகின்றோம்.

# ஒரு நிமிடம் சிந்திப்போம்

இரைச்சல் மிகுந்த சூழலில்வாழும் மனிதர்கள் - பலவித இன்னல்களை அனுபவிக்கிறார்கள். இதனால், அமைதியாக எமது வாழ்வியலை நகர்த்தமுடியாத துர்ப்பாக்கியநிலை இன்று மேலோங்கி இருக்கின்றது.

பாடல்கள், வாகன இரைச்சல்கள், தொழில்நுட்ப கருவிகளின் இரைச்சல்கள், வெடிச்சத்தங்கள், மனித தொடர் பாடல்கள் எல்லாமே சேர்ந்து, மனதிற்கு அழுத்தத்தினை கொடுக்கின்றது.

இரைச்சல்கள் எம்மை நாம் உள் நோக்கிப் பார்க்கத் தடையாக அமைகின்றது. அமைதிதருகின்ற கோயில்களும், சப்தம் நிறைந்த களமாக மாறிவிட்டது.

மனிதர்கள் தம்மைத்தாமே உள் நோக்கிப் பார்க்கவேண்டும். அதற்கு தியானம் பிரதானமானது. அதுவும் தனித் தியானம்.

அமைதியாக இருக்க மனிதன் முயற்சிப்பதே இல்லை. தினமும் அவசர கதியில் ஓடித்திரியும் ஒரு இயந்திரமாக காணப்படுகின்றான்.

அளவுக்கதிகமான மனிதத் தொடர்பும், அமைதிக்கு பாதகமாகவே அமைகின்றது தமக்கு பொழுதுபோகவில்லையென்றால், மற்றவர்களின் வேலைகளையும் கருத்தில் கொள்ளாது உரையாடிக் கொண்டிருப்பவர்கள் அதிகம்.

பொதுவாக மனிதர்கள் உரையாடுவதிலேயே காலத்தை கடத்துகிறார்கள். மற்றவர்கள் சொல்வதை பொறுமையாகக் கேட்டுப் புரிந்துகொள்ள நேரம் ஒதுக்குவதில்லை. இருபத்திநாலு மணி நேரமும் ஒருவர் பேசிக்கொண்டே இருப்பார். இந்தப் பேச்சு பொருத்தமானதா? அதனை மற்றவர்கள் சகித்துக் கொள்கிறார்களா என்பதையும் சிந்திக்க மறுக்கிறார்கள்.

எம்மை உள்நோக்கிப் பார்க்க, நாம் முதலில் சும்மா இருக்கவேண்டும். இந்த சும்மா இருத்தல்தான் தியானத்தின் உச்ச நிலை ஆகும். இதனை மேற்கொள்வதன் மூலம், எமது உள்ளத்துடன் பேசமுடியும். அதில் இருக்கின்ற சக்திகளை அறியமுடியும். பலம் - பலவீனம் என்ன? என்பதை உணர்ந்து முன்னோக்கி நகரமுடியும்.

தொலைபேசியில் ஒருவருடன் உரையாடும்போது, அவரின் கருத்துக்களை நாம் தெளிவாக கேட்கவேண்டும் என்றால, நாம் அமைதியாக சும்மா இருக்கவேண்டும். அப்போது அவர் பேசுவதைத் தெளிவாக விளங்கிக்கொள்ளமுடியும்.

ஆன்மீகத்தின் உச்சநிலையும், சும்மா இருத்தல்தான். தியானத்தின் உச்சநிலையும் சும்மா இருத்தல்தான். இந்த சும்மா இருத்தலுக்கு, சமூக தொடர்பினை அணுகவேண்டும். அப்போதே எம்முடன் தொடர்பு கொள்ளமுடியும்.

ஒருவர் தன்னை உணர்ந்துகொள்ள சமூகத்தொடர்பினை அறுத்தல்வேண்டும். சமூகத் தொடர்பினை அறுத்தல் என்பது முற்றுமுழுதாக சமூகத்திலிருந்து விலகியிருத்தல் என்பது பொருள் அல்ல. மாறாக தன்னை உணர்ந்துகொள்ளச் சொற்ப நேரமாவது மனதை ஒருமுகப்படுத்தி இருத்தல் ஆகும். ஆகவே, எம்மை நாம் ஆராய்ந்து கொள்ள கண்களைமூடி அமைதியாக இருக்கவேண்டும். தனிமனித வாழ்வின் அழுத்தத்தில் இருந்து விடுதலை பெற முயற்சிக்கவேண்டும். சிந்திப்போம் செயற்படுவோம்.

# நாடு எங்கே போகிறது

**பாம்பைப் போன்று தலையைக் காட்டியும், மீன் போன்று வாலைக் காட்டியும் தண்ணீருக்குள் வாழும் விலாங்கு போன்று அமெரிக்கா செயற்படுகின்றது என்ற தோரணையில் தென்னிலங்கைப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

**இதற்குக் காரணம் அமெரிக்காவில் இருந்து புதிய வெப்தளம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதுதான்.**

**United States Double Came என்று அந்தப் பத்திரிகை அமெரிக்காவை வர்ணித்துள்ளது.**

**தமிழ்நாடு நஷனல் லிபரேஷன் ஷறெண்ட் (Tamil Nadu National Srount) என்று அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்த வெப்தளத்தின்மூலம், இலங்கை பயஙகரவாதப் பிரச்சினைக்கு முகம் கொடுபபது மாத்திரமல்ல, இந்தியாவையும் இந்த வெப்தளம் இரண்டாகப் பிரிப்பதற்கு பிரசார நடவடிக்கையில் ஈடுபடலாம் என்று தெரிவித்துள்ளது.**

**ரஷ்யாவுக்கு எதிராக செச்சினிய தீவிரவாதிகளுக்கு ஆதரவு கொடுப்பதற்கு, செச்சினிய வெப்தளம் ஒன்று அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டுச் செயற்பட்டது என்று உதாரணத்தையும் காட்டியுள்ளது.**

**விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாகசபை வரைபைச் சமர்ப்பித்ததோடு, இலங்கையின் கடற்பகுதியில் மூன்றில் இரண்டு பகுதியை ஆக்கிரமிப்பதோடு, தனிநாடு அரசு ஒன்று நிறுவி, இந்த வெப்தளத்தின்மூலம் இந்தியாவையும் இரண்டாகப் பிரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறதாம்.**

**இந்த வெப்தளத்தின் தலைவர் மாறன். அவர் தற்போது உயிருடன் இல்லை.**

**மாறன் என்ற பெயரில் தமிழ்நாட்டு கடத்தல்காரன் வீரப்பனால் இது தோற்றுவிக்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ளது.**

**இலங்கை இந்தியாவை இவர்கள் வசீகரம் செய்வதோடு மட்டுமல்லாமல் - மாலைதீவு, மொறாசியஸ் ஆகிய தீவுகள் அடங்கிய பாரிய தமிழ் இராச்சியம் ஒன்றையும் உருவாக்க முனைந்திருக்கலாம்.**

**இந்த வெப்தளத்தின் செயற்பாட்டு இந்திய உளவுநிறுவனமான 'றோ' அதிகாரிகளுக்குத் தெரியாது உள்ளதா? அவர்கள் இந்திய நலனைக்காக்க வேண்டுமானால், இந்த வெப்தளத்தை இல்லாமல்செய்ய 'றோ'வினால் முடியாதா என்று அந்தப் பத்திரிகை கேள்வி எழுப்பியுள்ளது.**

**இந்த வெப்தளத்தின் பின்னணியில் விடுதலைப் புலிகள் இருக்கிறார்கள். இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் உருவாகும் இந்தச் சமயத்தில்தான் இந்த வெப்தளம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

**இலங்கையில் ஈழ அரசை உருவாக்குவது, தமிழ்நாட்டை இரண்டாகப் பிரிப்பதுதான் விடுதலைப் புலிகளின் திட்டம் என்றும் அந்தப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.**

**பாரிய ஆயுதங்களை ஈராக் வைத்திருப்பதாகக் கூறிக்கொண்டு, பொலிஸ்காரன்போல் அமெரிக்கா ஈராக் மீது போர் தொடுத்ததுபோல், தெற்காசியாவிலும் அது காலூன்றாமல் இருக்குமா என்பது ஐயப்பாடுதான்.**

**இந்த வெப்தளத்தைக் கண்டு பிடிப்பதற்கு றோவுக்கு முடியாமல் இல்லை. ஆரம்பத்தில் நடவடிக்கை எடுக்காது போனால் - அசாம், நாகலாந்து, பி.டபிள்யூ.ஜி.என் போன்ற தீவிரவாத அமைப்புக்கள் போன்று தமிழ்நாட்டில் தீவிரவாதம் மேலோங்கலாம் என்று அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.**

**என்ன செய்வது 'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பது போன்றே இந்தச் செய்திகளுக்கும் காலம் தான் பதிலளிக்கவேண்டும்.**

**- மகரம் -**

# ஈராக் பொலிஸ் நிலையத்தின்மீது தற்கொலைக்குண்டுத் தாக்குதல்!

## 50 பேர் பலி; பலர் படுகாயம்



பாக்தாத்தின் தென்பகுதியில் நேற்று பொலிஸ் நிலையம் ஒன்றின்முன் பாதுகாப்புக் காவலர்களாகப் பணிபுரிய விண்ணப்பிப்பதற்குக் காத்திருந்தவர்கள்மீது நடத்தப்பட்ட கார்க் குண்டுத் தாக்குதலில் 50 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டும், மேலும் 50 ஈராக்கியர்கள் காயமடைந்துள்ளதாகவும் வைத்திய சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தாக்குதலின்பின் பொலிஸ்நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள பிரதேசம் பொதுமக்களின் நடமாட்டத்திற்கு தடைசெய்யப்பட்டுள்ளதாகவும், பத்திரிகையாளர்கள் எவரும் உள்ளேசெல்ல அனுமதிக்கப்படவில்லை எனவும் தெரிவிக் கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் கூட்டுப்படையினர் எவரும் கொல்லப் படவில்லை என இராணுவ அதிகாரியான டான் வில்லியம் தெரிவித்தார்.

இதனிடையே சிலரது சிதைந்த உடற்பாகங்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. அத்துடன் பலரது உடல்கள் இடிந்த கட்டடப் பகுதிகளுக்குள் சிக்கியுள்ளதாகவும் அறிவிக் கப்படுகின்றது.

நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனத்திலிருந்து குண்டு வெடித்ததா அல்லது அவ்விடத்திற்குப் பிரவேசித்த காரிலி ருந்து குண்டுவெடித்ததா என இதுவரை அறியப்படவில்லை.

அண்மைக்காலங்களில் கார்க்குண்டுவெடிப்புகளும், தற் கொலைக் குண்டுத்தாக்குதல்களும் ஈராக்கில் அதிகரித்து வருவதாகவும், குறிப்பாக அமெரிக்கப் படையுடன் உறவுகளை வைத்துக்கொள்ளவேண்டாமென இஸ்லாமிய போராளிக்குழுக் கள் வலியுறுத்திவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.




## வேலைக்காரனை சிங்கத்துக்கு உணவாகக்கொடுத்த பண்ணையாளர்

### தென்னாபிரிக்க நீதிமன்றில் வழக்கு

(ஜோகன்னஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவில் பண்ணைச் சொந்தக்காரரும் அவரது மூன்று கூட ளிகளும் இணைந்து தமது பண் ணயில் வேலை செய்த ஒருவரை ங்கத்தற்கு உணவாக்கிக் கொடுத்த ாகக் குற்றஞ்சுமத்தப்பட்டு நீதிமன் றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள் ளது.

இந்த வழக்கு விரைவில் விசா ரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள் ளது.

இந்தப் பண்ணையில் கூலி வேலைசெய்த நெல்சன் சிசானி கடந்த வருடம் வேலையிலிருந்து நீக் கப்பட்டிருந்தார். மீண்டும் தனது உட மைகளை எடுத்துச்செல்வதற்குப் பண் ணைக்கு வந்தவேளையில பண்ணை உரிமையாளரால் துனபுறுத்தப்பட்டு கைகள் பிணைக்கப்பட்ட நிலையில் பண்ணைக்கு அருகாமையிலுள்ள வெள்ளைச் சிங்கங்களைப் பாது காப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த சரணாலயம் ஒன்றுக்கு எடுத்துச் சென்று சிங்கத்துக்கு உணவாகக் கொடுத்ததாகவும், சிங்கம் - சிசானின் உடற்பாகங்களை உண்பதை அவர் கள் அருகிலிருந்து அவதானித்துக் கொண்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் அவரது எஞ்சிய உடற்பாகங்களை தடயவியல் பரிசோ தனைக்காக பெரிரோறியாவில் அமைநதுள்ள நிலையத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாக மேலும் தெரிவித் தனர்.

## ஈரானில் ஏற்பட்ட விமானவிபத்தில் 43 பயணிகள் பரிதாப மரணம்!

(தெஹ்ரான்)

விசாக்களைப் புதுப்பித்துக்கொள்வதற்காக, ஐக்கிய அரபு எமிரேட்டிற்கு, ஈரானுக்குச் சொந்தமான விமான மென்றில் பிரயாணம் மேற்கொண்டிருந்த 45 பிரயாணி களில் 43 பேர்வரை விமானவிபத்தில் கொல்லப்பட்டுள் ளனர். மீட்கப்பட்ட மூவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இந்த விமானம் ஈரானிய தீவான 'கிஷ்' இலிருந்து சராஷ் நோக்கிப் பயணம் மேற்கொண்டிருந்தது. விமான நிலையத்தில் இருந்து 2 மைல்களுக்கு அப்பால் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது, விமானம் விழுந்த பிரதேசத் தில் எவரும் காணப்படவில்லை. விழுந்த விமானத்தின் முன்பகுதியில் எதுவித சேதமும் காணப்படவில்லை, அவ்விடத்தில் மீட்புப்பணிக்காகச் சென்றிருந்தோர் சிவப் புக் கம்பளங்களால் சுற்றப்பட்டு வரிசையாகச் சடலங்கள் அடுககிவைக்கப்பட்டிருந்ததாக தெரிவித்தனர்.

கொல்லப்பட்டவர்களில் - ஈரானியர்கள் எகிப்தியர் கள், இந்தியர்களும் அடங்கியுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

கிஷ் என்ற தீவு ஈரானுக்குச் சொந்தமானது வெளி



நாட்டவர்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்றது. இவ்விடத்தில் விமானக் கட்டணங்கள் மிகவும் குறை வாகவும், ஆசியநாடுகளைச் சேர்ந்ததவர்களுக்கு வளை குடா நாட்டு விசாக்களைப் புதுப்பித்துக்கொள்வதற்கும், சிறந்த பிரயாண ஒழுங்குகளைச் செய்வதற்கும் எற்ற இடமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## போராளிகள் வசமிருந்த பிரதேசம் சூடானியப் படைகளால் மீட்பு!



சூடானின் மேற்குப் பகுதியில் டார்பூர் என்ற பிர தேசம் போராளிகளிடமிருந்து மீட்கப்பட்டுள்ளதாக சூடானிய ஜனாதிபதி ஓமர்சுல் பசீர இராணுவ அறிக்கை ஒன்றில் தெரிவத்தார். ஆனால், போராளிக்குழு இந்தச் செய் திக்கு மறுப்புத் தெரிவித்துள்ளது.

போராளிகளுக்கு மன்னிப்பு வழங்குவதற்கும், அப் பிரதேசத்தை முன்னேற்றுவதற்குமாக அவர்களைப் பங்குகொள்ளச் செய்வதற்கான திட்டங்களைத் தெரி விபபதற்கும், மாநாடொன்றிற்கு அவர்களை சமுகந்தரு மாறும் சூடானிய ஜனாதிபதி கேட்டுள்ளார்.

மேலும் அருகில் அமைந்துள்ள பொலிஸ் நிலை யங்களில் ஆயுதங்களை ஒப்படைக்குமாறும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

ஆனால் சூடான் விடுதலை அமைப்பின் தலைவர் அம்டெல் பகாட்' மாநாடொன்றிற்கு சமூகமளிககும் ஜனா திபதியின் கருத்தை மறுத்துள்ளார். மேலும் நகரங்க ளும், கிராமங்களும் அழிக்கப்பட்டுவிட்டாலும் சிறிய கிராமங்கள் தமது கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் விடு தலை அமைப்பின் தலைவர் பி.பி.ஸிக்கு கருத்துத் தெரிவித்தார்.

இதனிடையே அரசிற்கு சார்பான சில அராபியக் குழுக்கள் - சூடானிய விடுதலை அமைப்பை அழித்து விடுவதற்கு முயற்சிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித் தார்.

ஓராண்டுகாலம் நடைபெற்று வரும் போரினால் இது வரை 800,000 மக்கள் வெளியேறியுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

## தென்னாபிரிக்க பொதுத்தேர்தல் ஏப்ரல் 14 இல் நடைபெறும்!

(ஜோகன்னஸ்பேர்க்)

தென்னாபிரிக்க ஜனாதிபதி தபோ மெபெகி தென் னாபிரிக்காவின் பொதுத்தேர்தல் ஏப்ரல் 14 ஆம் திகதி நடத்தப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் இந்தத் தேர்தலில் அதிகளவில்ான வாக்குப் பலத்துடன் வெல்லமுடியும் எனவும் - மக்களின் அடிப்படைத் தேவைகளான வீடு, குடிநீர் ஆகியவற்றைத் தாம் வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார். 1994 ஆம் ஆண்டு வெள்ளையர்களிட மிருந்து ஆட்சிமாறியபின்னர் நடத்தப்படும் 3 ஆவது தேர்தல் இதுவாகும். முதலில் ஜனாதிபதியாக நெல்சன் மண்டேலா தெரிவானமை குறிப்பிடத்தக்கது.



ஹெய்ட்டியில் - செயின் துறைமுகத்தில் கொள்கலன்களை உடைத்து, மக்கள் பொருட்களை எடுத்துச்செல்லும் காட்சி


### நீங்கள் நாட்டின் எப்பகுதியில் வாழ்ந்தாலும்

முறையாக ஆங்கிலம் கற்றுக்கொள்ள நல்லதோர் சந்தர்ப்பம்

**FULLTIME ENGLISH COURSE - 2 MONTHS**

நீங்கள் ஆங்கிலத்தில் தேர்ச்சியடைவது நிச்சயம்!

எல்லோருக்கும் உகந்த பாடத்திட்டம்

மாணவ/மாணவிகளுக்கு தங்குமிட வசதி

ஆங்கிலத்தில் சிறப்பாகப் பேசவும், எழுதவும் ஓர் அடிப்படை மட்டத்திலிருந்து கற்பிக்கப்படும். வகுப்பறையில் Continuous Assessment tests, நவீன முறைகள், Role Play, Presentations, Dialogues, Stories ஊடாக நடைமுறையில் ஆங்கிலப் பிரயோகத்தை கற்றுக்கொள்ளல்.

இதோ வருகின்ற **Full Time Course** இரு மட்டங்களில் நடத்தப்படும்.

**Level - ZERO** ஆங்கிலம் வாசிக்க/எழுத முடியாதவர்களுக்கு

**Level ONE** - ஆங்கிலம் வாசிக்க/எழுதக் கூடியவர்களுக்கு

இந்த மட்டத்தில் படித்து முடிப்பவர்கள் **IELTS/TOEFL** பரீட்சைகளில் உயர்ந்த புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

| Batch | Day | Time | Start Date | Duration |
|---|---|---|---|---|
| Weekday Batch | Mon - Fri | 8.30 - 3.00 | 08th March 2004 | 2 Months |
| Weekend Batch | Sat & Sun | 8.30 - 4.00 | 07th March 2004 | 4 Months |

நீங்கள் ஆங்கிலத்தில் தேர்ச்சியடைவது நிச்சயம். ஏனெனில்,

ஒரு வகுப்பில் 10 பேர் மட்டுமே/தனிப்பட்ட கவனிப்பு/வகுப்பறையில் ஒவ்வொருவரும் ஆங்கிலம் பேசும் வாய்ப்பு.

Audio, Video வளங்களைக்கொண்ட வகுப்பறைகள்,

சர்வதேச ஆங்கிலம் கற்பிப்பதில் அனுபவமிக்க ஆசிரியர்கள்

**PART TIME ENGLISH COURSES - 3 MONTHS**

| Courses | Start Date |
|---|---|
| After O/L Speech & Grammar - Levels zero and one | 11th February 2004 |
| Effective Speech & Grammar (ES&G) - Level zero | 7th February 2004 |
| Class Room English For Teachers - Level zero | 8th March |

IELTS/TOEFL Special Individual Classes with Audio Tapes

ங்களுடைய பாடத்திட்டத்திற்கு அமைய கீழ்க்காணும் இலவச புத்தகங்கள் பெற்றுத்தரப்படும்.

1 x Grammar book/3 x Speech books/2 x Oxford Reading books/3 x Audio Casscttes (Listening/Speaking)

ரூ. 200/= உடன் உடனடியாக பதிவுசெய்யுங்கள்:
காலை 10 மணி - மாலை 5.00 மணிவரை பதிவுகள் நடைபெறும்.

**Principal**
**English Grammar School**
**344,Goodshed Road, Kandy.**
**Tel: 0712 - 291296**

(சி-2211)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பல்கலை செயற்பாடுகள் வழமைக்குத் திரும்பியது

யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்பியதையடுத்து, பல்கலைக் கழக செயற்பாடுகள் வழமைபோல் இடம்பெற்றுவருகின்றன.

கடந்த மாதம் ஆரம்பமான ஊழியர் வேலைநிறுத்தப் போராட்டமானது கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தமிழீழ கல்விக் கழகத்தினருடனான சந்திப்பை அடுத்து கைவிடப்பட்டது.

இந்தச் சந்திப்பில், ஊழியர்களின் சில கோரிக்கைகளை நிறைவேற்றிவைப்பதாக யாழ். பல்கலைக் கழக நிர்வாகம் ஏற்றுக்கொண்டதை அடுத்தே ஊழியர்கள் தமது போராட்டத்தை நிறுத்திக்கொள்ள சம்மதித்தனர்.

இதனையடுத்து, கடந்த திங்கள் முதல், யாழ்.பல்கலைக்கழகத்தின் அனைத்து செயற்பாடுகளும் வழமைக்குத் திரும்பின.

இதேவேளை, யாழ். பல்கலைக் கழக கலைப்பீட மாணவர்களுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படாமை குறித்து மாணவர்கள் பெரும் விசனம் தெரிவித்தனர்.

முதலாம் வருடத்திற்கு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில, இன்னமும் கடந்தவருடம் முதலாம் வருடப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான பெறுபேறுகள் வெளியிடப்படவில்லை. இதனால், முதலாம் வருட மாணவர்கள் சிறப்புக்கலை, பொதுக் கலைத் தெரிவுகளை மேற்கொள்ள முடியாமலும், தொடர்ந்து கல்விச் செயற்பாடுகளுக்குச் செல்ல முடியாமலும் காலம் இழுபட்டுச் செல்வது குறித்தும்,

இவ்வாண்டு பட்டம் பெறவுள்ள பொதுக் கலை மாணவர்களின் பெறுபேறுகள் இன்னமும் வெளியிடப்படாமை குறித்துமே மாணவர்கள் விசனம் தெரிவித்தனர்.

## தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நேற்று கொழும்பில் கூடியது

(கொழும்பு)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள் நேற்றுமாலை கொழும்பில் கூடி எதிர்வரும் தேர்தலில் பங்கேற்கும் உத்திபற்றி விவாதித்தனர்.

நேற்றுமாலை மலையக மக்கள் முன்னணி சார்பில் அமைச்சர் சந்திரசேகரன், கூட்டமைப்பு உறுப்பினர்களை சந்தித்தார் எனவும் வடக்கு-கிழக்கு தவிர ஏனைய பகுதிகளின் நிலைகுறித்து அவருடன் கலந்துரையாடபபட்டது என்றும் அவரின் கட்சியுடன் அடுத்தவாரம் உடன்பாடு ஒன்று ஏற்படும் என்றும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

## தேர்தல் அதிகாரிகளுக்கு சனியன்று விசேட கூட்டம்!

### தயானந்த திஸநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகங்கள் மற்றும் உதவித்தேர்தல் ஆணையாளர்களுக்கான விசேட கூட்டமொன்று கொழும்பில் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

தேர்தல் தயாரிப்புப் பணிகள் குறித்து ஆராய்வதற்காக இந்தக் கூட்டத்திற்கு அழைப்பு விடப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

2002 ஆம் ஆண்டு தேர்தல் இடாப்பின் அடிப்படையில் ஒரு கோடி 28 லட்சத்து 99 ஆயிரத்து 32 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த வாக்காளர்கள் - 196 நாடாளுமன்ற உறுப்பினர்களை தேர்தல் மூலம் தெரிவு செய்யவுள்ளதுடன், 29 பேர் தேசியப்பட்டியல் மூலம் தெரிவுசெய்யப்படுவர்.

## நாடாளுமன்றக் கலைப்பு; பங்குச்சந்தை பெருவீழ்ச்சி!

நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை ஜனாதிபதி சந்திரிகா விடுத்தபின்னர், இலங்கை பங்குச்சந்தையில் பத்துவீத வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாகவும், இது கொழும்பு பங்குச்சந்தை வரலாற்றில் ஏற்பட்ட இரண்டாவது பெரிய வீழ்ச்சி என்றும் கூறப்படுகிறது.

கடந்த நவம்பர் மாதம் நான்காம் திகதி - மூன்று முக்கிய அமைச்சுக்களை ஜனாதிபதி சந்திரிகா தமது பொறுப்பில் எடுத்துக்கொண்ட பின்னர், முதலாவது பாரிய பங்குச்சந்தை வீழ்ச்சி கொழும்பு பங்குச்சந்தையில் ஏற்பட்டது. 12 வீத பங்குச்சந்தை வீழ்ச்சி ஏற்பட்டபோதும், பின்னர் நாட்டில் அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்ட பின்னர் வழமைக்குத் திரும்பியிருந்தது குறிப்பிடத்தக்கது.

### ஜனாதிபதியின்...

ருக்கிறது. யுத்தநிறுத்த ஒப்பந்த மூடாக பேச்சுவார்த்தைமூலம் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தி, சீரழிந்துள்ள பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் ஆரம்ப நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டோம்.

நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையைக் கொண்டிருந்த அரசாங்கம் ஒன்று உலகில் முதல் தடவையாக கலைக்கப்பட்டுள்ளது. இந்தச் சவால்களை அனைத்தையும் எதிர்நோக்கும் சக்தி ஐக்கிய தேசியக் கட்சியிடம் இருக்கின்றது. இதில் வெற்றி பெறுவதற்கு சகலரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என பிரதமர் தெரிவித்தார்,

### அனைத்து...

களை முன்னெடுக்கவிருப்பதாகவும் தெரியவருகிறது.

சிங்கள மக்கள் மீதான விசேட கவனிப்பு என்ற நிலையில் அல்லாமல் வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ், முஸ்லிம் சமூகங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் சிஹல உறுமய கவனத்தில் எடுக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புலிகளுடன் இணையச்சென்ற சிறுவர்கள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்!

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணையச் சென்ற இரண்டு சிறுவர்களை, விடுதலைப் புலிகள் பெற்றோரிடம் ஒப்படைத்தனர்.

இந்த நிகழ்வு நேற்று, பொற்பதி அரசியற்துறையில் இடம்பெற்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் சுதாஸ், கண்காணிப்புக்குழு முன்னிலையில் சிறுவர்களை ஒப்படைத்தார்.

போர்நிறுத்தக் கண்காணிப் [illegible] குழுவின் பிரதிநிதி கஜல் அ[illegible]நீன், மனித உரிமை ஆணைக்கு[illegible]வின் பிரதிநிதிகள், அரசியற்துறையை சேர்ந்த இமையவன் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

### உள்ளூராட்சி...

கல்முனை மாநகரசபைக்கும் இந்தத் தேர்தல் நடைபெறவுள்ளது. 2002 ஆம் ஆண்டில் நடைபெறவிருந்த இந்த தேர்தலில் போட்டியிட ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈ.பி.டி.பி ஆகிய மூன்று சுயேட்சைக் குழுக்கள் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்திருந்தன. இந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்கு சகல ஏற்பாடுகளும் தயார் நிலையில் இருப்பதாக அம்பாறை மாவட்டச் செயலர் கேரக் அபஜதீர தெரிவித்துள்ளார்.

## அமெரிக்க உயரதிகாரி...

லாளர் விவகாரங்கள், தொடர்பாக குறிப்பாக சர்வதேச வர்த்தகத்தில் தொழிலாளர் கல்வி விவகாரம் குறிதது கலந்துரையாடல்களை நடத்துவார்.

அத்துடன், அரசாங்க அமைச்சுகள், தொழிலாளர் சங்க மற்றும் சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரையும் சந்திக்கவிரு[illegible]கிறார்.

அமெரிக்கத் தொழிலாளர் திணைக்களத்தின் நிதியுத[illegible]வியுடன் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களை இவர் நேரில் பார்வையிட இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

### எந்தவொரு...

கட்சிகளுக்கு வழங்கும் என்று அமெரிக்கா நம்புகிறது.

அனைத்துக் கட்சிகளும், இணக்க முயற்சிக்கு தொடர்ந்து ஆதரவளிக்க முன்வரவேண்டுமென்றும், தேர்தல் பிரசாரங்களில் மற்றும் தேர்தல் அதன் பெறுபேறுகள் என்பன, இலங்கையின் சமாதான முயற்சிகளில் தடையை உருவாகாது என்று நம்புவதாகவும் அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் ரெய்லர் மேலும் தெரிவித்தார்.

## அதிகாரமுள்ள எந்த...

நவீன உலகில் நாம் வாழ்ந்து வருகின்றோம். எனவே இந்தத் தேர்தலில் நாமும் மாறவேண்டியுள்ளது.

அத்துடன் அதிகாரத்திற்குவரும் சிங்கள அரசியற்தலைவர்கள் சமாதான வழிமூலம் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அந்த வழியினை இறுகப் பற்றிக்கொள்ளவேண்டும்.

ஜே.வி.பி. - சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணி தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த கருணா - இந்தக் கூட்டணி நாட்டின் ஒவ்வொருத்தருக்கும் ஆபத்தானது.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் முன்றாவது அனுசரணையாளர் தேவையில்லை என ஜே.வி.பி கூறுகிறது. முன்றாவது அனுசரணையாளர் தேவை என்பதை ஒவ்வொருவரும் நன்கு புரிந்துகொண்டுள்ளனர்.

எமக்கு மூன்றாவது அனுசரணையாளர் முக்கியமாகத் தேவை. முன்றாவது அனுசரணையாளர் தேவையில்லை என்றால் நிலைமை அபாயகரமானதாக அமையும்.

எமது தலைவர் சரியான முறையிலேயே சமாதான முய[illegible]ற்சியை ஆரம்பித்தார். நாம் எமது பக்[illegible]கத்தில் வடக்கு - கிழக்கிற்கான [illegible]இடைக் கால தன்னாட்சி அதிகார [illegible] வரைவு மொழிவை ஒப்படைத்துள்ளோம். இதனைப் பரிசீலிக்கவேண்டியது சிங்களத் தலைவர்களைப் பொறுத்தது.

நாடாளுமன்றக் கலைப்பு என்பது ஏற்கனவே எதிர்பார்த்த ஒன்றுதான். இது கலைக்கப்பட்டபின் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இருக்கவில்லை.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருடன் யுத்தநிறுத்தத்தைப் பேணுவது, பிராந்திய ரீதியில் கண்காணிப்புத் தலைவர்களுடனும், படையினருடனும் உறவுகளைப் பேணுவது தொடர்பாகவும் பேசினோம் என்று தெரிவித்தார்.

### இராணுவத்தினர்...

(வயது 22) சி.குட்டி (வயது 19) ஆகியோரே படையினரால் தாக்கப்பட்டு காயமுற்றநிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்த பார்த்தீபன் என்ற இளைஞன் பலத்த காயமடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

## கைதாகி காணாமற்போனோர்...

கடந்தகால மனிதஉரிமை வன்செயல்களில் காணாமற்போனவர்கள் தொடாபில் அந்தக் காலத்தில் இருந்த படையதிகாரிகளே அதற்கான பொறுப்பை ஏற்கவேண்டும்.

படைச் சிப்பாய்களுக்கு தமிழ் மொழியை நாம் கற்பிக்கவேண்டும். அவர்களுக்கு கற்பிக்காவிட்டால் தமிழ் சமூகத்துடன் நாம் இணைய முடியாது. நாங்கள் தமிழர்களது மனங்களை வெல்லவேண்டியுள்ளது.

இதுவரை 5700 படையதிகாரிகள் மற்றும் சிப்பாய்களுக்கு தமிழ் மொழி கற்பித்தல் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. 1250 பேர் தமிழ் மொழி பரீட்சையில் தகுதிகாண் சித்தியடைந்துள்ளனர்.

தமக்குக்கீழ் பணிபுரியும் சிப்பாய்களுக்கு படையதிகாரிகள் உளவியல் ரீதியான பயிற்சிகளை வழங்க வேண்டும். அதன்மூலம் தனிப்பட்ட ரீதியில் அவர்கள் தற்கொலை செய்வதைத தவிர்த்துக்கொள்ள முடியும்.

சர்வதேச மனிதாபிமானச் சட்டம் மற்றும் மனிதஉரிமைகள் தொடர்பான ஐந்துவருட பயிற்சிநெறிக்கு 36 படையதிகாரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்தக் கற்கைநெறிக்கான நிதியினை பிரிட்டன் உயர்ஸ்தானிகராலயம் வழங்கவுள்ளது எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், பாதுகாப்பு அமைச்சின் செயலர் சிறில் ஹேரத், மனிதஉரிமைகள் ஆணைக்குழுவைச் சேர்ந்த ரி.தியாகராசா, சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தலைமைப் பணிமனை அதிகாரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## இம்முறை வாக்களிக்க...

வாக்களிக்கத் தகுதியுடையவர்களாக உள்ளனர். ஐம்பத்தொரு அரசியற் கட்சிகள் தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்துள்ளன. இதில் விடுதலைப்புலிகளின் அரசியற் கட்சியான மக்கள் முன்னணியும் அடங்கும்.

இந்தமுறை தேர்தலில் மாவட்ட ரீதியில் உள்ள வாக்காளர் எண்ணிக்கை விபரம் வருமாறு. கொழும்பு- 1,467,751, கம்பஹா- 1,327,145, களுததுறை - 746,138 கண்டி -880, 632 மத்தளை - 312,556, நுவரெலியா - 436,236, காலி - 716, 608 - மாத்தறை - 550,503, ஹம்பாந்தோடடை - 384,361, யாழ்ப்பாணம் 644,279, வன்னி - 224,307, மட்டக்களப்பு - 330,928 அம்பாறை - 379, 044 திருகோணமலை 224,307, குருனாகல் - 1,089,482, புத்தளம் - 450, 057, அனுராதபுரம் 514,149, பொலநறுவை - 254,061, பதுளை - 511, 115, மொனராகலை - 262,742, இரத்தினபுரி - 647,035, கோகாலை - 570, 299 ஆகும்.

இதேசமயம் இந்தத்தேர்தலின் மூலம் குருநாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்களிற்கு தலா ஒரு உறுப்பினா வீதம் அதிகமாகத் தெரிவு செயயப்படவுள்ளனர்.

கடந்த பொதுத்தேர்தலின்போது பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட குருநாகல் மாவட்டத்தில் 16 உறுப்பினர்களும், ஏழு உறுப்பினர் கொண்ட புத்தளம் மாவட்டத்தில் எட்டு உறுப்பின்ர்களும் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

இதேவேளை கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் கடந்த பொதுத்தேர்தலைவிட இம்முறை தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த பொதுத்தோர்தலின்போது 21உறுப்பினர்களை த் தெரிவுசெய்த கொழும்பு மாவட்ட வாக்காளர்கள் இம்முறை 20 பேரை தெரிவுசெய்வர்.

கம்பஹா மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை பதினெட்டில் இருந்து பதினேழாகக் குறைக்கப்பட்டுள்ளது.

## குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்கு...

பாடசாலைகள் மக்கள் வாழ்விடங்கள் வைத்தியசாலைகள் ஆலயங்கள் கிராமங்கள் என்பன இன்னமும் புனரமைக்கப்படவில்லை.

விவசாயம், கடற்தொழில் போன்ற தொழில்கள் சுதந்திரமாகசெய்ய முடியாதநிலை கடந்த இரண்டு தசாப்தகால கொடிய போரினால் துன்புற்றிருக்கும் மக்களை வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை வசதிகளில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. தமது சொந்த வாழ்விடங்களுக்கு சென்று குடியேறவும் தொழில் செய்யவும் முடியாநிலையில் மக்கள் சர்வதேச சமூகத்தில் முன் நீதிவேண்டி பல சாத்வீகப் போராட்டங்களை நடத்திவருகிறார்கள்.

இத்தனை வேதனையான நிகழ்வுகளுக்கு மத்தியில் அதிர்ச்சிதரக்கூடிய பல சம்பவங்கள் யாழ். குடாநாட்டில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

தூண்டிவிடப்பட்ட குற்றச் செயல்கள் என்றுமில்லாதவாறு அதிகரித்து இருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. திட்டமிடப்பட்ட கொலைகள், கொள்ளைகள் திருட்டுக்கள் பாலியல் வல்லுறவுகள் குழுமோதல்கள் என்பன சர்வசாதாரணமான நிகழ்வுகளாக மாறிவருகின்றன.

குற்றவாளிகளை இனங்கண்டு பிடித்துக் கொடுத்தாலும் சரியான சட்டநடவடிக்கை ஏதுமின்றி ஓரிரு தினங்களில் குற்றவாளிகள் சுதந்திரமாக வெளியில் வருகின்றனர்.

யாழ்.குடாநாட்டிலுள்ள இளைஞர்கள் மத்தியில் புகைத்தல், மது அருந்துதல் போதைவஸ்து பாவனை ஆபாசப் படங்களைப் பார்த்தல், ஆபாச சஞ்சிகைளை விநியோகித்தல் போன்ற சமூக விரோதச் செயல்களை சமூகவிரோதசக்திகள் திட்டமிட்டு செயற்படுத்திவருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சமூக விரோத செயல்களைப் புரிபவர்களுக்கு பக்கபலமாகவும் பாதுகாப்பாகவும் சீருடைத்தரப்பினர் இயங்கி வருவதை நன்கு அறியக்கூடியதாக உள்ளது.

விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஒரு இனத்தின் இளம் சந்ததியினர் விடுதலை உணர்வை மழுங்கடித்து போராட்டத்திலிருந்து அந்நியப்படுத்தி இளம் சந்ததியினரை அழிவுப்பாதையில் இட்டுச்செல்லும் இனஅழிப்பு நடவடிக்கையாகவே இதைப்பார்க்க வேண்டும. எமது விடுதலைப் போராட்டத்துக்கு, எதிரான சக்திகளால் திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டுவரும் இச்செயல்களை குடாநாட்டு மக்கள் அனைவரும் இனங்கண்டு சம்பந்தப்பட்டவர்களை களையெடுப்பதற்கு உதவிபுரியுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம் என அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1589 திகதி: 10.02.2004

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| P | 9 | 7 | 2 | 7 | 4 | 2 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.02.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.